1198

3-

தொகுதி 3.] 1924வரு மேமீ 1உ [பகுதி 4.

# மனமோகினி.

ஆக்கியோர்
ஆரணி. குப்புசாமி முதலியார்.




பிரசுரகர்த்தர்
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலயம், சென்னை.

# மனமோகினி

ஓர் மாதாந்த சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் அச்சஞ்சிகையில், ஒவ்வொரு நாவலும் சிற்சில சஞ்சிகைகளில் விரைவில் முடிவு பெறும்படி, சில நாவல்களை வெளிப்படுத்தி வரவேண்டுமென்று அடிக்கடி கேட்டு வருகின்றார்கள். அச்சஞ்சிகை பற்பல விஷயங்களுக்கும் இடந் தர வேண்டியதா யிருத்தலின், அதில் ஒவ்வொரு மாதத்திற்கும் இரண்டு மூன்று பக்கங்களே நாவல் வெளியிடக்கூடியதா யிருக்கிறது. அதனால் நம் நண்பர்களின் விருப்பம் நிறைவேறக் கூடாததாகிறது. ஆதலின் நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது மேற்கூறியவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதோடு மற்றைய தமிழபிமானிகட்கும் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று இதனை 1922ளு பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்தோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாக வந்து ஆறு மாதங்களுக்கொரு முறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இப்போது மகா அற்புதம் பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவழத்தீவு" என்ற நாவல்கள் முடிவுபெற்று "ஞானசேல்வாம்பாள்" என்ற நாவல் தொடங்கப்பட்டிருக்கிறது. முடிவான இரண்டு நாவல்களும் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ள வேண்டுமென்றி சஞ்சிகைகள் கிடையா. "ஞானசேல்வாம்பாள்" வேண்டியவர்கள் சந்தாதாரராகச் சேர்ந்து சஞ்சிகை பெற்றுக்கொள்ளவேண்டும். இச்சஞ்சிகை கிரௌன் 80-பக்கங் கொண்டது. வருஷ சந்தா ரூ. 2-8-0 இரண்டரைதான். வெளிநாட்டிற்கு 3—0—0. அடியிற் கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன் பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

☞ முன் பணம் அனுப்பினால் 2—8—0யும், மணியார்டர் கமிஷன் 1-அணாவுமாகும். வி-பி-யில் ரூபா 2—13—0 ஆகும்.

இது அநேக நாவல்கள் இயற்றிய ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் அவர்களால் எழுதப்பட்டது. அவருடைய நாவலின் போக்கு எல்லோருக்குந் தெரிந்திருக்குமாகையால் மாதிரி காப்பி அனுப்பப்படமாட்டாது.

மானேஜர்: "ஆனந்த நிலையம்"

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, மதராஸ்

17 JUL 1925

கிருஷ்ணராஜு அதை வாசித்து முடிந்ததும் பினுக பாணிப்பிள்ளை அக்கடிதத்தை யவனிடமிருந்து பிடுங்கி இராஜசுந்தரியிட மளித்து "குழந்தாய்! இதை வாசித்துப்பார்! இதில் இராஜப்பிரதிநிதி யவர்கள் நமது நண்பனைப்பற்றி எவ்வளவு புகழ்ந்து சிலாகித்து எழுதி யிருக்கிறார்பார்" என்றுகூறினர். இராஜசுந்தரி அக்கடிதத்தை வாசிக்கத் தொடங்கினாள். கிருஷ்ணராஜு அக்கன்னிகையை நோக்கிக்கொண் டிருந்தான். பினுகபாணிப்பிள்ளை அவளிடம் கடிதத்தை யளித்து விட்டதும், பெட்டியைத்திறந்து பார்த்துக்கொண் டிருந்தார். ஆதலால் வாலிபர்களைக் கவனிக்கவில்லை.

இராஜசுந்தரி அக்கடிதத்தை வாசிக்கும்போது அவள் முகத்தில் குபீல் என்று ஒருவிதப் பிரகாசம் உண்டாகியது. அவள் கண்களில் குளிர்ச்சியான ஒளிதோன்றியது. அவள் உள்ளம் அடக்கமுடியாத சந்தோஷத்தால் பொங்கியது. அவள் மனம் பரவசமடைந்தது. அவள் கடிதத்தை வாசித்ததும் தலைநிமிர்ந்து கிருஷ்ணராஜை நோக்கிய போது, அவன் அக்கன்னிகையின் முகத்தில் தோன்றிய மாறுதலையும் அவள் சந்தோஷத்தையும் மன உணர்ச்சியையும் கண்டான். அவன் மனம் உடனே முன்னிலும் அதிகமாக அவள் அன்பினுற் கரைந்தது. அவன் அவள் முகத்தை நோக்கியதும், அவனை யுற்று மகிழ்ச்சியோடு பார்த்துக்கொண்டிருந்த இராஜசுந்தரி தலை குனிந்து திரும்பி விட்டாள்.

சற்று நேரத்திற்குள் ஆகாரம் வட்டிக்கப்பட்டது. போஜனம் முடிந்ததும் பினுகபாணிப்பிள்ளை இராஜப்பிரதி நிதி அந்த உலோபியாகிய கிழவனது பொன்னைக் கிருஷ்ணராஜுக்குப் பரிசாக அளிக்கும்படி நேர்ந்த சந்தர்ப்பத்தைக் கூறக்கருதி பின் வருமாறு மொழிந்தார்.



186500.

"இப்போது நான் நடந்த சங்கதியைக் கூறுகிறேன். நேற்று கணபதி என்னிடம் வந்து பேசினனென்று கூறி இரகசியத்தை இப்போது வெளியிடலாகாதென்றேனல்லவா. அந்தக் கணபதிப்பிள்ளை பைத்தியக்காரனல்ல. அவன் புத்தி சற்றும் சலனமடைந்தில்லை. அதற்குமாருக அவன் நல்ல புத்தியும் நல்ல உள்ளமும் உத்தமகுணமும் பொருந்தியவன்; உலகத்திலுள்ள தீமைகளைக்கண்டு யாவற்றையும் வெறுத்தவன். அவன் நேற்று என் பாங்கிக்கு வந்து சவம் அகப்பட்ட சங்கதியையும் நமது நண்பன் அப்பொன்னை வேண்டாமென்று மறுத்ததையும் கூறிவிட்டு, நமது வாலிபனுடைய உத்தமகுணத்தைப்பற்றி, அடடா! எவ்வளவு புகழ்ந்து கூறினன் தெரியுமா! நெடுநேரம் அதைப்பற்றிப் பிரசங்கமே செய்தான். கடைசியில் "இவ்வுலகத்தின் அக்கிரமங்களைக் கண்டு என்மனம் புண்பட்டே நான் உலகையே வெறுத்துவிட்டு இந்த நிலைமையிலிருக்கிறேன். பணத்திற்காக மனிதன் செய்யாத குற்றமே யில்லை. எத்தகைய அக்கிரமங்களையும், படுகொலை படுமோசங்களையும் பொன்னுக்காகச் செய்வான். ஏறக்குறைய யாவருமே பணம் சம்பாதிக்க எதையும் செய்யத்துணிவார்கள். இத்தகைய உலகில், இப்படிப்பட்ட நீதியையும் சத்தியத்தையும் கவனிக்கும் உத்தம குணமும், சுயநலங்கருதாது பிறருக்கு ஆபத்தில் உயிருக்கும் துணிந்து உதவி புரியும் உதாரத்வமும் பெருந்தன்மையும், சற்றும் பிரயாசையின்றி எடுத்துக்கொள்ளக் கூடிய பொக்கிஷத்தை, நீதியைக் கருதி வெறுக்கும் உத்தம நெறியும் உடைய ஒருவனிருப்பதைக் கண்டது, எனக்குப் பேய்கள் வாழும் பாழ்ங்குகையாகிய நரகத்தை விட்டுத் தெய்வநாட்டில் குடியேறியது போல் உவகையையீன்றது. இத்தகைய உத்தமனுக்கே அப்பொன் பரிசா

யளிக்கப்படும்படி எப்படியாவது செய்விக்கவேண்டு மென்று நான் தீர்மானித்துக்கொண்டிருக்கிறேன். நீரும் துணைவர வேண்டும்" என்று ஒரேபிடிவாதமாகக் கூறினன். இத்தகைய விஷயத்தில் நமது நண்பனுக்கு உதவி செய்யச் சந்தர்ப்பம் வாய்ந்ததற்காக நான் மிக்க சந்தோஷமடைந்தேன். உடனே இருவரும் இராஜப்பிரதிநிதியிடம் சென்றோம். அங்கு சென்றதும் கணபதிப்பிள்ளை இராஜப்பிரதிநிதியிடம் நமது நண்பன் அப்பொன்னை யெடுத்துக்கொள்ளமாட்டேனென்று வாதித்ததைப்பற்றி விரிவாகக் கூறி இவனைப்பற்றி வெகுவாய்ப்புகழ்ந்தான். பிறகு நான் சுப்பற் சேதத்தைப்பற்றியும் நமது நண்பன் அக்கிழவனுக்குச்செய்த உதவியைப் பற்றியும் யாவும் கூறினேன். அதனுல் உண்டான பயன்றான் இது" என்ருர்.

கிருஷ்ணராஜு பிஞகபாணிப்பிள்ளைக்குத் தக்க மொழிகளால் தன் நன்றியறிதலை வெளியிட்டான். பிஞகபாணிப்பிள்ளை "சுமார் பதினைந்து பதினறு ஆயிரம் பவுன்கள் பெறும்படியான ஆஸ்தி யுனக்குக் கிடைத்ததைப்பற்றி நான் எவ்வளவோ சந்தோஷமடைகிறேன்" என்ருர். அதைக்கேட்டதே வாலிபனுக்குச்சொல்லொணு ஆனந்த முண்டாய்விட்டது. அந்தப்பொன் அவ்வளவு மதிப்புடையதென்று அவன் சற்றும் கருதியிருக்கவில்லை. அதில் சுமார் பத்தில் ஒரு பாகம் பெறுமென்றே யெண்ணி யிருந்தான். ஆகையால் இப்போது அது அவனுக்குப் பெரிய ஆஸ்தியாகத் தோன்றியது. அவன் மனம் பூரிப்படைந்தது.

போஜனம் முடிந்து இரவு சயனித்துக்கொண்டபோது அவன் இந்த ஆஸ்தியைப்பற்றி சிந்திக்கலாஞன். "இப்போது இவ்வளவு பணம் கிடைத்தவரையில் இனி நமது

பாட்டனாரையும், நமது உண்ணாமுலையையும் க்ஷேம நிலைமையில் வைத்து விடலாம். நமது பாட்டனாரைச் சிறையிலிருந்தே மீட்டுவிடலாம்'' என்று கருதினான். தான் கப்பற் சேதத்தினின்றும் தப்பித்ததைப் பற்றி அவர்களுக்குக் கடிதம் எழுதி ஒருவாரந்தானாயிற்று. இனி நாம் கூடிய சீக்கிரத்தில் இங்கிருந்து புறப்பட்டு நம் தாய்நாடு சேர்ந்து நமது பாட்டனாருக்கும் அத்தை புத்திரிக்கும் சந்தோஷத்தையும் சுகத்தையும் க்ஷேமத்தையும் உண்டாக்கவேண்டும் என்று தனக்குள் சந்தோஷத்தோடு நினைத்துக்கொண் டிருக்கையில் திடீலென்று ஒரு நினைப்புண்டாகி அவனைப் பெருமூச்சு விடும்படி செய்தது.

அது என்ன நினைப்பெனில் இராஜசுந்தரியின் நினைப்பே. அவளைப்பிரிந்து செல்வதால் அவன்மனம் வேதனையுறும்போல் தோன்றியது. இது நாம் அவளிடத்துக் கொண்ட நட்பினாலேயே யாக்கும், நம்மைப் பிரிவதால் அவள் மனதிற்கும் வியாகூலமே தோன்றும் போலும்; ஆயினும் நாம் நமது கடமையைச் செய்ய வேண்டியது தானே. எப்படியாயினும் சீக்கிரத்தில் ஒரு கப்பலிலேறிச் செல்லவேண்டியதே என்று தனக்குள்தீர்மானித்துக் கொண்டான்.

மறுநாட் காலை போஜனம் முடிந்ததும் பினாகபாணிப் பிள்ளை கிருஷ்ணராஜை நோக்கி "நண்பனே! நான் இப்பொன்னை யெடுத்துப்போய் நாணயமாக மாற்றிவிடுகிறேன். கூடியவரை அதிக தொகை கிடைக்கும்படியாகவே செய்வேன். ஆனால் இரண்டு மூன்று நாட்கள் செல்லும்'' என்றார்.

கிருஷ்ணராஜு சிந்தித்துப் பார்த்தான்; "இரண்டு மூன்று நாட்கள் ஆலசியத்தால் ஒரு கெடுதியும் நேராது; மேலும் தான் பிரயாணத்திற்கு ஆயத்தமாக எப்படியும்

இரண்டு மூன்று நாட்கள் செல்லும்" என்று சிந்தித்துக் கொண்டு பிநாகபாணிப் பிள்ளையின் வார்த்தைக்கு மாறு கூறுமல் அவ்வாறே செய்யுங்கள் என்றான்.

பிநாகபாணிப் பிள்ளை நகரத்திற்குச் சென்றதும் கிருஷ்ணசாமி கணபதிப் பிள்ளையைக் கண்டு அவனுக்கு வந்தன மளிக்க விரும்பித் தன் அபிப்பிராயத்தை இராஜ சுந்தரிக்கு வெளியிட்டான். உடனே இருவரும் உலவச் சென்றார்கள். கிருஷ்ணராஜு இதுகாறும் பிநாகபாணிப் பிள்ளையிடமாவது இராஜசுந்தரி யிடமாவது தன் குடும்ப விஷயங்களைப்பற்றி பிரஸ்தாபித்ததேயில்லை. இப்போது இவர்களிருவம் பேசிக்கொண்டே சென்றபோது, கன்னிகை உருக்கத்தோடு அவனை நோக்கி "நீர் இனி கடலின் ஆபத்துகளுக்குத் துணிந்து கப்பலில் தொழில் செய்யப்போக வேண்டிய அவசியமே யில்லை - மிக்க அவசியம் நேர்ந்தாலொழிய ஒருவரும் அத்தகைய ஆபத்தில் போய் சிக்கவே மாட்டார்கள்" என்றாள்.

கபடில்லாதுபோல் கூறப்பட்ட இம்மொழிகளைக் கேட்டதே அவன் மனதில் ஒரு நவீன உணர்ச்சியுண்டாயிற்று. "அட! இவள் என்ன நாம் இத்தீவிலேயே நிலைத்து விடுவோம் என்று கருதுகிறாளோ" என்று கருதினான். ஆயினும் அவ்வாறே நிலைத்து விடுவதாயின் அவன் மனதிற்குத் திருப்தியாகவே இருக்கும்போலிருந்தது. ஆனால் தான் உடனே தன் தாய்நாட்டிற்குச்செல்ல வேண்டியது அவசியமாக விருக்கிறது. இதை யவளிடம் கூறவேண்டியதே யென்று கருதினான். சற்று சிந்தித்து அவளை நோக்கி "எனக்குக் கடலில் பிரயாணம் செய்ய வேண்டியது அவசியமேயில்லை யென்று நீ கருதியிருப்பதாகத் தெரிகிறது. கப்பல் மாலுமியாகவோ, அல்லது கப்பலில் பிரயாணியாகவோ நான் கடல்யாத்திரைசெய்ய

வேண்டியது அவசியமாகவே யிருக்கிறது. இங்கித நாட்டில் என் சுற்றத்தா ரிருக்கிறார்கள். வயது முதிர்ந்த என் பாட்டனார் ஒருவர் இருக்கிறார். அவர் மிக்க துன்பத்தை யனுபவித்துக்கொண் டிருக்கிறார். என் அத்தையின் சந்ததி யொன்று இருக்கிறது. அதையும் மிக்க ஏழ்மையான நிலைமையில் விட்டு வந்திருக்கிறேன்'' என்றான்.

இராஜசுந்தரி:—அப்படி யாயின் அவர்களிடம் செல்ல மிக்க ஆவல் கொண்டிருக்கிறீர்.

கிருஷ்ண:—ஆ! அது என் கடமையல்லவா? என் சுற்றத்தாரை அத்தகைய நிலைமையில் விட்டு வந்திருக்கும்போது, இப்போது நான் அவர்களைப் போய்க் காண வேண்டியது நியாயமும் கடமையுமாகுமென்றே உன் உத்தமகுணமே கூறும்.

கன்னிகை.—அப்படியாயின் அவசியம் எங்களை விட்டுப் பிரிந்து விடவே கருதுகிறீர்.

வாலிபன்.—நீயே சிந்தித்துப்பார். உண்மையில் உங்களை விட்டுப் பிரிவதென்னமோ என்மனதிற்கு மிக்கவியாகூலத்தையே யளிக்கிறது. கப்பற்சேதத்தி லிருந்து உயிர்தப்பி அனாதையாக வந்த என்னை யாதரித்து எனக்குச் சொல்லரிய உதவியைச் செய்து எவ்வளவோ அன்புகாட்டிய உங்களைப் பிரிவது எனக்கு மிக்க வியாகூலமே. ஆனால் நான் என் கடமையைச் செய்ய வேண்டியவ னல்லவோ? மனம் பிடித்துக் கொண்டேனும் அதைச் செய்யவேண்டுமே.

கன்னிகை:—"நீர் போகவே வேண்டுமென்றால் உம்மை யாரும் தடுப்பவரில்லை'' என்று மன வாட்டத்தோடு கூறினாள்.

வாலிபன்:—"நான் உனக்கு முன்னமே கூறினே னல்லவா! என் வயோதிகமான பாட்டனார் ஒருவரிருக்

கிறர், என் அத்தை புத்திரியாகிய உண்ணுமுலை யிருக்கிறுள்" என்றதே,

இராஜசுந்தரி முகத்தில் விகாரமடைந்து "ஆ! அத்தைபுத்திரியா! நான் உம்மைப்போன்ற வாலிபனென்றல்லவோ எண்ணினேன்" என்றுள்.

கிருஷ்ணராஜ ::— "இல்லையில்லை, பதினெட்டு வயதுடைய கன்னிகையே; மிக்க நல்லவள் - சகல நற்குணங்களும் பொருந்தியவள்" என்றதும், இராஜசுந்தரி "நல்ல அழகுமுடையவளாகவே யிருப்பாள்" என்றுள்.

வாலிபன்:—ஆ! உண்ணுமுலையின் அழகைப்பற்றி நான் இதுகாறும் கவனித்ததே யில்லை. நீ இப்போது கூறவே தெரிகிறது. நல்ல வசீகரமான முகமுடையவளே; மிக்க அன்பு நிறைந்த உள்ளமுடையவள்" என்றுன்.

கன்னிகை: — அப்படியாயின் இங்கிருக்கும் போதும் அவளை யடிக்கடி நினைத்துக்கொண்டே யிருப்பீர்.

கிருஷ்ண:—ஆகா! அவளும் என்னை அப்படியே நினைத்துக் கொண்டிருப்பாள் என்பது நிச்சயம்.

கன்னிகை:—"இடையில் உங்களுக்குள் கடிதப்போக்குவரத்து இருந்திருக்கும்" என்றுள்.

அவ்வாறு கூறும்போது அவள் மிக்க தடுமாற்றமுற்றவள்போலும் இடையில் தட்டென்று சுவாசம் அடைபட்டவள்போலும் தள்ளாடினுள்.

அதைக்கண்ட கிருஷ்ணராஜ பயந்து "அய்யோ! உனக்கென்ன தேகத்திற்கு" என்று கூறிக்கொண்டே அவள் கரத்தைப் பற்றிக்கொண்டு முகத்தைநோக்கினுன். அவள் கண்களில் நீர் வடிவதைக்கண்டு "ஓ இராஜசுந்தரீ! உனக்கு வருத்தமுண்டாகும் வண்ணம் நான்

ஏதேனும் கூறிவிட்டேனா? ஏன் அழுகிறாய்? உனக்கு வருத்தமுண்டான காரணம் என்ன? அதை யவசியம் கூறவேண்டும். எனக்குன்னிடமுள்ள நட்பில்சந்தேகமா? என்றான்.

இராஜசுந்தரி உடனே தன் கண்களைத் துடைத்துக் கொண்டு மனோதிடமடைந்து "நீர் எப்படி என்மேல் பூரணமான நட்புகொண் டிருக்கலாகும். உமது அன்பு உமது அத்தைமகள்மே லிருக்கிறது. உங்களுக்குள் காதல் ஏற்பட் டிருக்கலாகும்; நீர் அங்குசென்றதும் அவளை மணம்புரிந்துகொள்ளப் போகிறீர்" என்றாள்.

இம்மொழிகளைக் கேட்டதே கிருஷ்ணராஜனு புத்தியில் இதுகாறும் தோன்றாதிருந்த உண்மை, இருட்டறையில் விளக்கேற்றினால் அதில் இதுகாறும் கண்ணுக்குப் புலப்படாதிருந்த வஸ்துக்கள் எப்படி யுடனே தெளிவாகப் புலப்படுமோ, அது போலவே விளங்கிவிட்டது - அதோடு அவள்மேல் தன் மனதில் உண்டாயிருந்த அன்பாகிய உணர்ச்சி காதலேயென்றும் அவன் மனதிற் புலப்பட்டது. உடனே அவன் மனதில் மிக்க சந்தோஷமுண்டாயிற்று. அவன் அவள் கரத்தைப்பற்றி "ஓ! இராஜ சுந்தரி! இப்போது என் மனதிலுண்டாகிய ஆனந்தத்திற்கோர் எல்லையில்லை. உண்ணுமுலைக்கும் எனக்கும் இருப்பது நட்பே. எங்களுக்குள் காதல் என்ற பிரஸ்தாபம் ஒருபோதும் நேர்ந்ததேயில்லை. நான் மனப்பூர்வமாகக் காதலிப்பதுன்னையே. உன்னையே நான் மணம் புரிந்துகொள்வேன்" என்றான்.

இதைக்கேட்டதே இராஜசுந்தரியின் உள்ளம் பூரித்துவிட்டதென்று நாம் கூறுவது அனாவசியமே.

## 31-வது அத்தியாயம்.

### நற்புத்தியும் காதலின் ஒப்பந்தமும்.

புதிதாக உண்டான முதற்காதலின் நிகழ்ச்சியால் இருவரும் தம்மை மறந்து ஆலிங்கனம் செய்து கொண்டார்கள். அச்சமயம் சற்று எட்டவிருந்த செடிகளுக்கிடையில் உண்டான சத்தத்தால் அங்கு யாரோ மனிதர் இருந்து தங்கள் செய்கையைக் கண்டதாகக் கிருஷ்ணராஜுக்குப் புலப்பட்டது. ஆயினும் அவன் அதை இராஜசுந்தரிக்குக் கூறவில்லை. அதன் பிறகு அவர்களுக்குள் நடந்த அந்தரங்க சம்பாஷணையால் இராஜசுந்தரி ஆரம்பத்திலிருந்தே தன்மேல் காதல்கொண்டிருக்கிறாளென்றும், வரவரத் தன் குணவிசேடங்களைக் கண்டு அவள் காதல் அதிகமாயிற்றென்றும் கிருஷ்ணராஜு உணர்ந்து பேருவகை கொண்டான்.

பிறகு அவன் தன் ஜன்மதேசத்திற்குப் போய் வரவேண்டியதைப்பற்றிக் கூறியபோது, இராஜசுந்தரி இங்கிருந்தபடி சுற்றத்தாருக்கு எல்லா உதவியையும் செய்யலாமென்றும் கடல் யாத்திரையில் நேரிடக்கூடிய ஆபத்துகளுக்குள்ளாக்குவது தனக்குப் பிரியமில்லை யென்றுங் கூறித் தன்னலானவரை யவனைச் செல்ல வொட்டாது தடுக்க முயன்றாள்.

கிருஷ்ணராஜு அவள் என்ன கூறியும் அதற்குச் சம்மதியாமல் அப்படிச் செய்யின் அது நன்றியற்ற பெரிய துரோகமாக முடியுமென்றும், காதல் விஷயம் எப்படியிருந்தாலும் தன் கடமையைச் செய்யத் தவறின் யோக்கியதை யுடையவனாகக் கருதப்படமாட்டானென்றும், போய் துரிதமாகவே திரும்பி விடுவதாகவும் எவ்வளவோ கூறிய பின் சற்றுநேரம் சிந்தித்துவிட்டுக்

கடைசியில் "அப்படியே போய் வாரும் தங்களுடைய பெருந்தன்மை புகழத்தக்கதே. என்மேல் தங்களுக்கு உண்மையான பூரண அன்பே யிருக்கிறதென்று நான் அறிவேன்" என்று கூறினாள்.

இவர்கள் தங்கள் சந்தோஷ சம்பாஷணையால் மற்ற யாவற்றையும் மறந்துவிட்டார்கள். கிருஷ்ணராஜு கணபதிப்பிள்ளையைக் காணவேண்டியதை யடியோடு மறந்தான். சம்பாஷித்துக்கொண்டே யிருவரும் வீட்டை நோக்கிச் சென்றார்கள். அங்கு சென்றதும் இராஜசுந்தரி ஏதோ குடும்ப வேலை யிருந்ததால் அதைக் கவனிக்க உள்ளே சென்றாள். கிருஷ்ணராஜு தனியே யுட்கார்ந்திருக்க நேர்ந்தது. அப்போது கணபதிப் பிள்ளையைக் காணமலே வந்துவிட்டதை நினைந்து "சே சே! அவனைக் கண்டு நமது வந்தனத்தை யளிக்காவிடின் அது செய்ந்நன்றி கொன்றதாகும்" எனவெண்ணி உடனே புறப்பட்டான்.

வாலிபன் நெடுந்தூரம் சென்று கடற்கரை யோரம் செல்லும் பாதையிற்றிரும்பும்போது எதிரில் கணபதிப் பிள்ளை அவனை யொருவாறு உற்று நோக்கிக்கொண்டே அருகில் வந்து நின்றதும் வாலிபன் அவனுக்கு வந்தனமளித்து " அய்யா! தாங்கள் எனக்குச் செய்த பேருபகாரத்திற்கு என் ஜன்மம் முழுமையும்கூட நான் உமக்குப் பதில் செய்யமுடியாது. நான் அதற்காகத் தங்களுக்கு என் நன்றி யறிதலைத் தெரிவிக்கவே இப்போது தங்கள் வாசஸ்தலத்தை நோக்கி வந்துகொண் டிருக்கிறேன்." என்றான்.

கணபதி "எனக்கு நீ வந்தனமளிக்கவே வந்தாயின் அது என் வரையில் அனுவசியமே. ஆயினும் நன்றியறிதல் நல்ல சிறந்த குணமே. கெட்ட குணங்களி

ருக்கும் மனதில் அது முளைத்துத் தழைப்பது கஷ்டம். அதிருக்கட்டும். இப்போது நீ என்ன செய்யப் போகிருய்? இங்கேயே நிலைத்துவிடப் போகிருயா? அல்லது சீக்கிரம் உனது ஜன்மதேசம் போகப்போகிருயா?" என்று கேட்டான். வாலிபன் "நான் கூடிய சீக்கிரம் என் ஊருக்குப் புறப்படவே போகிறேன்." அங்கு தங்களுக்கு என்னல் ஏதேனும் ஆக வேண்டியதிருந்தால், தங்கள் கட்டளைப்படி செய்ய மிக்க ஆவலுடையவனுக விருக்கிறேன்" என்ருன்.

கணபதி:—இல்லை இல்லை. எனக்கு உயிருள்ள மனிதன் எவனும் செய்யக்கூடிய உதவி எதுவுமில்லை. ஆனல் வாலிபனே! நான் கூறுவதைக் கவனி. நீ நல்ல யோக்கியனென்று சகல விதங்களாலும் நன்கு விளங்குகிறது. ஆகையால் உனக்கு ஆதரணை தந்து எல்லா உதவியும் செய்த பினகபாணிப் பிள்ளைக்கு நீ துரோகம் செய்ய எண்ணுவாய் என்று நான் நினைக்கவில்லை. சே, ஒருபோதும் செய்யமாட்டாய். என்ன, நல்ல நீதியும் சீவகாருண்யமும் பெருந்தகைமையுமுள்ள மனதில் அத்தகைய துரோக சிந்தனை யொருபோதுமுண்டாகாது" என்ருன்.

இம்மொழிகளைக்கேட்ட கிருஷ்ணராஜனுக்கு மிக்க மனக்கலக்கமுண்டாயிற்று. அவன் முகம் வேறுபட்டது. "என்ன? என்ன நீர் கூறுவது?" என்ருன்.

கணபதி:—நண்பனே! நீ யின்னும் வாலிபனே. உனக்குச் சுமார் இருபது வயதே யிருக்குமென்று நம்புகிறேன். வாலிப மனம் வருங் காலத்தைச் சிந்திக்காது. உலக அனுபவம் தெரியாததால் ஒரு காரியத்தில் பிரவேசித்தால், பின்னல் அதினல் என்ன பயனுண்டாகும் என்று சிந்திக்கும் அறிவு அப்போ

தில்லை. தற்சமயம் கிடைக்கும் சந்தோஷத்தை மட்டுமே கருதுவது இயற்கை ஆயினும் களங்கமற்ற அப்பெண் உன்னைக் காதலிக்கும்படி செய்திருக்கம மாட்டாய் என்றே நம்புகிறேன்.'' என்றான்.

இம்மொழிகளைக் கேட்டதே வாலிபன் உண்மையை யுணர்ந்தான். செடி மறைவிலிருந்து, யாரோ தங்களைக் கண்டதாக அவன் உணர்ந்தவிஷயம் இப்போதுதினைவிற்கு வந்தது. "ஆ! நீர் கூறிய விஷயம் இன்னதென வுணர்ந் தேன். செடிகளினருகிலிருந்து நீர் பார்த்தீர்'' என்றான்.

கணபதி "ஆ! இப்போது நீ இதை யொப்புக் கொண்டதன் அர்த்தமென்ன? அப் பெண்ணிடம் சூதாக வேதேனும் புகன்றனையோ?'' வென்றான்.

வாலிபன் "சூதாகவா! ஒரு காலும் நான் அப்படிப் பட்ட காரியம் செய்யவேமாட்டேன். நான் உண்மை யாகவே அக் கன்னிகைமேல் காதல்கொண்டேன். ஊருக் குச் சென்று சீக்கிரம் திரும்பிவந்து அவளையே மணம் புரிவதாகக் கூறினேன். பினாகபாணிப்பிள்ளை வீட்டிற்கு வந்ததே அவரிடம் யாவும் கூறப்போகிறேன்'' என்றான்.

கணபதி "ஆ சரி. அதுதான் நேர்மையான நெறி. பினாகபாணிப்பிள்ளை யின்னும் அவளைத் தன் புத்திரியாக அங்கீகாரம் செய்துகொள்ளாவிடினும் அவள்மேல் பூரண புத்திரி வாஞ்சை யுடையவர்'' என்றான்.

இம்மொழிகளைக்கேட்ட கிருஷ்ணராஜு மிக்க வியப் பும் பிரமையுமடைந்தான். "என்ன? என்ன சங்கதி? புத்திரியா?'' என்றான்.

கணபதி:—"ஆம் இங்குள்ள அனைவர்க்கும் நடந்த சங்கதி தெரியும். அப்படிக்கின்றேல் நான் ஒருபோதும் இதை வெளியிடேன். பினாகபாணிப்பிள்ளை மணம் புரிந்துகொள்ளவேயில்லை. இவர் தோட்டத்தில்

ஒரு அழகிய மாது வேலை செய்துகொண் டிருந் தாள். இவர் அவள்மேல் பிரியங்கொண்டதால் அதன் பலனாக இப்பெண் பிறந்தாள். பிரசவித்த வுடனே அம்மாது இறந்துபோனாள். பினாகபாணிப் பிள்ளை இப்பெண்ணைத் தன் வசத்திலே வைத்துக் கொண்டு வளர்த்து வந்தார். தன் போன்ற தோட் டக்காரர்கள் வர்த்தகர்கள் முதலியோர் அவமதிப் பார்களென்றோ, வேறெந்தக் காரணத்திற்கோ, உண் மையை மறைத்து அவள் தன் சகோதரன் புதல்வி யென்று கூறிக்கொண் டிருக்கிறார். அப்பெண்ணுக் கும் அந்த உண்மையை வெளியிடவில்லை யென்றே நம்பப்படுகிறது.'' என்றான்.

கிருஷ்ணராஜா:—“ஆம். ஆம். அவள் சற்றும் கபட மில்லாதவள். அவளுக்கு அந்த உண்மை தெரி யாதுதான்'' என்றான்.

கணபதி:—“சரி நீ ஊருக்குப் போகுமுன் அவகாச மிருக்கும்போது என்னை வந்து காண விரும்பு கிறேன்'' என்று கூறிவிட்டுத் திரும்பிச் சென்றான்.

கிருஷ்ணராஜா அவன் தன் கண்களுக்கு மறையு மட்டும் பார்த்துக் கொண்டிருந்து கடைசியில் வீட்டிற் குத் திரும்பினான். “ஆ! இவன் மிக்க அதிசயமான மனி தன். ஆனால் இவன் துன்பத்தை அநியாயமாக அனுப வித்து அதனால் வெறுப்படைந்தவனே யன்றி, கட்டாய மாகக் குற்றம் ஒன்றும் செய்தவனல்லன். இவன் ஒரு போதும் குற்றம் செய்யும் சுபாவமுடையவனல்ல. மிக்க அருமையான நல்ல குணங்களை யுடையவன்'' என்று தனக்குத்தானே கூறிக்கொண்டே சென்றான்.

வாலிபன் வீட்டினருகிற் செல்லும்போது பினாக பாணிப்பிள்ளையும் தன் பாங்கியிலிருந்து வந்து வண்டியி

னின்று இழிந்தார். அவர் பொன் இருக்கும் பெட்டியைக் கூடவே கொண்டு வந்தார். கிருஷ்ணராஜை நோக்கி "நண்பனே! இன்று இதன் வேலை நிறைவேறவில்லை. நாளை நல்ல விலை கிடைக்கும் என்பது நிச்சயம் இதை என் தொழிற்சாலையில் வைப்பதைவிட இங்கு வைப்பதே நலம். நீ யுன் அறையிலேயே வைத்திருந்தால் பத்திரமாக விருக்குமென்றார். அவ்வாறே அப்பெட்டி அவன் படுக்கை யறையில் வைக்கப்பட்டது.

பினகபாணிப்பிள்ளை வந்ததைக்கண்டதே இராஜசுந்தரியும் ஓடி வந்தாள். சற்று நேரத்திற்குள் போஜனம் வட்டிக்கப்பட்டது. அது முடிந்து ஆடவர் சாராயம் முதலிய பானங்களை யருந்தும்போது ஸ்திரீகள் வெளியிற் போய்விடுவது அவர்கள் நாட்டு ஆசாரம். அதன் படியே இராஜசுந்தரி போய்விட்டாள். அதன் பிறகு கிருஷ்ணராஜு தான் அவளை மணம்புரிய விரும்பும் சங்கதியை மிக்க தடுமாற்றத்தோடு பினகபாணிப்பிள்ளையிடம் கூறினன்.

வர்த்தகர்:—ஆ! நீங்கள் இருவரும் இன்னும் மிக்க வாலிபர்கள். உங்கள் அறிமுகம் கொஞ்சநாள் கூட ஆகவில்லையே" என்றார்.

வாலிபன்:—ஆயினும் நாங்கள் நெடுநாட்கள் பழகியவர்கள் போலவே ஒருவர் மனதை யொருவர் நன்றுயறிந்துகொண் டிருக்கிறோம். தாங்கள் தயவுசெய்து அனுமதி யளித்தால்......" என்றான்.

வர்த்தகர்:—இவ்விஷயத்தில் இராஜசுந்தரியின் அபிப்பிராயத்தை யறிந்து கொண்டாயா?

வாலிபன்:—அந்த அபிப்பிராயம் எனக்கு அனுகூலமாக இராவிட்டால் நான் தங்கள் அனுமதியைக் கேட்டிருக்கவே மாட்டேன். தாங்கள் அனுகூலமான

விடையே யளிப்பீர்களென இருவரும் நம்பியிருக்கிறோம்.

வர்த்தகர் புன்னகையோடு:—ஓ! நீங்கள் என் அபிப்பிராயம் அனுகூலமென்று முன்னடியே தீர்மானித்துக் கொண்டு ஒரு முடிவிற்கு வந்துவிட்டீர்கள். அப்படியாயின் நான் சம்மதிக்க வேண்டியதே. வாலிபனே! நான் உன் பிரியத்திற்கு மாறுகூறேன் என்று உனக்குத்தெரிந்தே யிருக்க வேண்டும். உன்னைப்பற்றி நான் எவ்வளவு உயர்ந்த மதிப்பு வைத்திருக்கிறேனென்பதை நீ யறிவாய் - உன் கருத்தென்ன! உன் ஊருக்குப் போய்த் திரும்பிவந்து மணம்புரிந்து கொள்வதென்று?

வாலிபன்:—ஆம். அவ்வாறே ஆயினும் இப்போது நிச்சயமான ஒப்பந்தம் எங்களுக்குள் ஏற்பட்டு விட வேண்டு மென்பது என் வேண்டுகோள்.

வர்த்தகர்:—சரிதான். ஆனல் நான் ஒன்று கூறுகிறேன். அதாவது உனக்கு எந்த விஷயத்திலேனும், ஆட்சேபனையாவது, கலக்கமாவது, ஐயமாவது தோன்றின் நீயுன் ஒப்பந்தத்தை உடைத்துக் கொள்ளலாம். இதைமட்டும் நான் முன்னடி அறிவித்து விடுகிறேன்.

கிருஷ்ணராஜன்:—ஆ! தாங்கள் கூறுவதை யறிந்து கொண்டேன். அந்த விஷயத்தைப் பற்றி எனக்கு எள்ளளவு கலக்கமேனும் ஆக்ஷேபனை யேனும் இல்லை.

வர்த்தகர்:—ஓ! அதை யறிந்துகொண் டிருக்கிருயோ? இராஜசுந்தரிக்குத் தெரியாதே.

வாலிபன்:—ஆம், இராஜசுந்தரிக்குத் தெரியாது தான். நான் தற்செயலாகக் கேள்விப்பட்டேன்.

வர்த்தகர்:—" இருக்கலாம், அது அதிசயமல்ல. இங்குள்ள வேலையாட்களுக்கெல்லாருக்குமே அது தெரியும். நீ அவர்களில் யாரிடமேனும் தாராளமாகப் பேசியிருப்பாய். அவர்கள் எப்போதும் அன்னியர் சங்கதிகளைப் பேசுவதில் பிரிய முடையோர்கள்" என்றார்.

கிருஷ்ணராஜு அச்சங்கதியைத் தனக்குக் கூறியவன் கணபதியென்று வர்த்தகரிடம் கூற விரும்பவில்லை. இவர்கள் பேசி முடிந்ததும் இராஜசுந்தரி தாழ்வாரத்தின் வழியாகத் தோட்டத்திற்குச் செல்வதை கிருஷ்ணராஜு கண்டு, அவளிடம் நடந்த சங்கதியைக் கூறவேண்டுமென்ற ஆவலோடு பினாகபாணிப்பிள்ளையின் வதனத்தை நோக்கினான்.

வாலிபன் கருத்தை யறிந்த அவ்வர்த்தகர், " சரி, நீபோய் உன் காதலியிடம் சங்கதியைக் கூறு. இப்போது உன்னைத் தடுப்பது சரியல்ல" என்றார்.

கிருஷ்ணராஜு அவருக்குச் சந்தோஷத்தோடு வந்தன மளித்துவிட்டு ஓடிப்போய்த் தன் காதலியை யடைந்து வர்த்தகர் அனுமதியளித்த சங்கதியைக்கூறி, பொன் நாளைக்குக் கட்டாயம் நாணயமாக மாற்றப்படுமென்றும், இன்று அதைத் தன் அறையிலேயே பத்திரமாக வைக்கும்படி பினாகபாணிப் பிள்ளை கூறியதையும் இயம்பினான்.

கன்னிகை:—" அப்படி யாயின் தாங்கள் கட்டாயம் போகவே போகிறீர்களோ?" என்று வினவினாள்.

கிருஷ்ணராஜு:—" என் அன்பார்ந்த காதலியே! நான் என் கடமையைச்செய்தே தீரவேண்டுமென்று முன்னமேகூறினேன். நீயும் அது நியாயமேயென்று சம்மதித் திருக்கிறாயல்லவா? நாளைக்கு அது பண

மாய்விட்டால் நான் கூடிய சீக்கிரத்தில் புறப்பட வேண்டும். அப்போதுதான் சீக்கிரத்தில் திரும்பி வரக்கூடும்" என்ருன்.

கன்னிகை "சரிதான், போய்த்தான் வரவேண்டும்" என்ருள்.

அச்சமயம் எதிரில் யாரோ வருவதைக்கண்டு உற்று நோக்கினர்கள். வருவது நீலன் என்ற நீக்ரோ என்று தெரிந்ததும் இராஜசுந்தரி முன்போலவே பீதியடைந்தாள். ஆனல் நீலன் மரியாதை யாகவே இருவர்க்கும் வந்தன மளித்துவிட்டுப் பிஞகபாணிப்பிள்ளையின் வீட்டைநோக்கிச் சென்ருன். அவன் அடுத்த தோட்டக்காரரிட மிருந்து பிஞகபாணிப் பிள்ளைக்கு ஒரு கடிதம் கொண்டுவந் திருந்தான்.

கிருஷ்ணராஜு கன்னிகையை நோக்கி "உனக்கு இவன் விஷயத்தில் முன்போல் பயம் இன்னும் இருந்து கொண்டேதா னிருக்கிறது. நீ எப்போதும் இவன் விஷயத்தில் மிக்க ஜாக்கிரதை யாகவே இருக்கவேண்டும். நான் ஊருக்குச் சென்றபின் மறுபடி வரும்வரையில் நீ அகாலங்களிலேனும் தனியாகத் துணையின்றி யேனும் வெளியில் செல்லவே கூடாது. அப்படிப் போவதில்லை யென்று எனக்கு வாக்களிக்க வேண்டும்" என்ருன்.

இருவரும் நெடுநேரம் உலவிவிட்டு வீட்டிற்குத் திரும்பினர்கள். அச்சமயம் வர்த்தகர் போஜன கூடத்தில் உட்கார்ந்து சுருட்டு பிடித்துக்கொண் டிருந்தார். இராஜசுந்தரி சற்று நேரங்கழித்துத் தன் சயன அறைக்குச் சென்ருள். கிருஷ்ணராஜு நெடுநேரம் பிஞகபாணிப் பிள்ளையோடு சம்பாஷித்துக்கொண் டிருந்துவிட்டுக் கடைசியில் தன் சயன அறைக்குச் சென்ருன்.

கிருஷ்ணராஜு தன் அறைக்குச் சென்றதும் தன் உடைகளைக் கழற்றி ஒரு பக்கம் வைத்துவிட்டுச் சயன உடை யணிந்துகொண்டான். அப்போது வழக்கம்போல் ஜேபிகளிலிருந்த கடிதம் பணம் முதலிய யாவற்றையு மெடுத்து மேஜைமேல் வைத்தான். அவற்றில் அந்த அறையிலிருந்த அலமாரியின் சாவிகூட இருந்தது. அந்த அலமாரியில் தான் பொன் இருக்கும் பெட்டியை வைத்திருக்கிறன்.

அச்சாவியைக் கண்டதும் "ஆ! இவ்வளவு செல்வத்தையும் சீக்கிரத்தில் நமது பாட்டனாரும் உண்ணுமுலையும் காண்பார்களல்லவா. ஆகா அவர்கள் எவ்வளவு சந்தோஷமடைவார்கள்" என்று சிந்தித்ததே அலமாரியைத் திறந்து பெட்டியை யெடுத்துப்பார்த்தான். பொன் கட்டிகள் யாவும் அப்படியே யிருக்கக்கண்டு மறுபடிப் பெட்டியை யலமாரியிலேயே வைத்துப் பூட்டிவிட்டுச் சாவியை மேஜைமேல் வைத்துவிட்டுச் சயனித்துக் கொண்டான். இரவு மிக்க சந்தோஷமான சிந்தனையால் சற்றுநேரம் அவனுக்கு நித்திரை பிடிக்கவில்லை. அதன் பிறகு சுகமான நித்திரை யடைந்தான்.

வாலிபன் காலையில் விழித்துக்கொண்டு படுக்கையிலுட்கார்ந்தபோது தினம் இருப்பதற்கு மாறாக வெளிக் காற்று தான் சாளரத்தைக் திறக்கு முன்பே யுள்ளே வந்திருப்பதாகத் தோன்றியது. எழுந்துபோய்ச் சாளரத்தைப் பார்த்தான். சாளரம் திறக்கப்பட்டிருந்தது. தான் இரவு அதை மூடியிருந்தது அவனுக்கு நன்றாய்க் கவனமிருந்தது. ஆயினும் அதைப்பற்றி யவன் அவ்வளவாய்க் கவனிக்கவில்லை.

கிருஷ்ணராஜு உடனே முகத்தைச் சுத்திசெய்து கொண்டு உடை யணிந்துகொண்டான். அச்சமயம் சாள

ரத்தின் வழியாக இராஜசுந்தரி தோட்டத்திலிருப்பதைக் கண்டு துரிதமாகச் சென்று அவளிடம் நெருங்கினன். இருவரும் மிக்க சந்தோஷமாகவே சம்பாஷித்துக் கொண்டு உலவிக்கொண்டிருந்து கடைசியில் வீட்டிற்குத் திரும்பினர்கள். அச்சமயம் பினகபாணிப்பிள்ளை தன் தொழிலுக்குச் செல்ல அவசரத்தோடு போஜனம்செய்து கொண்டிருந்தார். இவர்களும் உட்கார்ந்து போஜனம் செய்தார்கள். பினகபாணிப்பிள்ளை போஜனம் முடிந்த தும் உடுத்திக்கொண்டு வேலைக்குச்செல்ல ஆயத்தமானர். வண்டி தயாராக வாசற்படியில் கொண்டுவந்து நிறுத்தப் பட்டது.

பினகபாணிப்பிள்ளை துரிதமாகச் சென்று வண்டியில் ஏறி யுட்கார்ந்தார். அச்சமயம் நினைத்துக்கொண்டு "ஆ! மறந்துவிட்டேன். நண்பனே! பொன் பெட்டியை யெடுத்துக் கொண்டுவா!" என்றார். வாலிபன் நாணத் தோடும் புன்னகையோடும் "நானும் அடியோடு அதை மறந்துவிட்டேன். இதோ கொண்டு வருகிறேன்" என்று துரிதமாக மேல் மாடிக்குச்சென்று தன்னறைக்குள் நுழைந்து, சாவியை யெடுத்து அலமாரியைத் திறந்து பார்த்தான். உடனே பேரிடி விழுந்தவன்போல் திடுக் கிட்டுக் கண்களைத் துடைத்துக்கொண்டு கையாற்றடவிப் பார்த்தான். அலமாரி காலியாயிருக்கிறது. பெட்டி யில்லை. வாலிபன் மனதிலுண்டான துயரம் இவ்வள வென்றுவது இத்தகைய தென்றுவது கூறமுடியாது. அங்கிருந்து வீறிட்டபடி கூச்சலிட்டுக்கொண்டு கீழே யிறங்கி யோடினன்.

பினகபாணிப்பிள்ளை அக்கூச்சலைக் கேட்டுத் திடுக் கிட்டு மிக்க கலவரமடைந்து "என்ன ? என்ன சங்கதி?" என்றார். இராஜசுந்தரியும் அலறிக்கொண்டு வாலிபனரு

கில் நெருங்கி "அய்யோ என்ன சங்கதி ?" என்றாள். கிருஷ்ணராஜு "ஓ! பொன் போய்விட்டது. ஆ! அந்த நீலன் நேற்று மாலை நான் அதைப்பற்றிக் கூறிய போது கேட்டுக்கொண்டிருந்தான். அவனே களவாடி யவன்" என்றான்.

கன்னிகை "ஆம், ஆம், அவனே களவாடி யிருக்க வேண்டும்." என்று பிரலாபித்தாள். பிநாகபாணிப் பிள்ளை "இது பிரமாதமான விஷயம். இதைச் சும்மாவிட லாகாது. எதோ எங்கே வைத்திருந்தாய் பார்ப்போம்" என்றார். உடனே மூவரும் மேல்மாடியிலேறி கிருஷ்ண ராஜு சயனித்த அறைக்குள் சென்று பார்த்தார்கள். கவனித்துப் பார்த்தபோது, சாளரத்தின் கதவில் இருந்த கண்ணாடியில் தாழ்ப்பாளுக்கருகில் ஒரு துண்டு அறுத் தெடுக்கப்பட்டிருந்தது. அச்சமயம் இராஜசுந்தரி ஆ! என்று சாளரத்தின் வெளிப்பக்கம் நோக்கினாள்.

அங்கு சாளரக்கதவிலறுக்கப்பட்ட கண்ணாடித் துண்டு இருந்தது. கிருஷ்ணராஜு "ஆ! எல்லாம் நன்றாய்த் தெரிகிறது. அவன் இச்சாளர வழியாகவே உள்ளே பிரவேசித்தான். நீலனே இதைச் செய்தவன். சந்தேகமேயில்லை" என்றான்.

நேயர்களே "நீங்கள் கொஞ்சகாலமாகவே அறிமுக மாயிருக்கிறீர்கள்" என்று பிநாகபாணிப்பிள்ளை கூறியதற் குக் கிருஷ்ணராஜு "நாங்கள் நெடுநாட்கள் பழகியவர் கள்போல் ஒருவர் மனதை யொருவர் நன்றாயறிந்து கொண்டோம்" என்று கூறினானல்லவா ? அது எவ்வளவு வரை யுண்மை யென்பது போகப்போகத் தெரியும். அதோடு வாலிபகாலத்தில் பரஸ்பரக்காதல் ஒன்றில் மட்டுமே இருவர்க்கும் நாட்டமிருக்குமன்றிக் குணங் களைப்பற்றியும் வருங்கால விஷயங்களைப்பற்றியும் அவர்

கள் மனம் சிந்தியாது என்ற உண்மையும் நன்கு வெளியாகும்.

---

## 32-வது அத்தியாயம்.

### படுமோசச் செயல்கள்.

இப்புதுக் காதலர்களைத் தற்சமயம் மேற்கிந்தியத் தீவுகளிலேயே விட்டு விட்டு இந்திர புரியில் நடக்கும் சில சம்பவங்களைப் பற்றிக் கூறுவோம். செல்வாம்பாள் அச்சுதனோடு ஓடிப்போய் பன்னிரண்டு நாட்களாயின.

இந்திர புரியின் வடபாகத்தில் அழகிய மாடி வீடுகள் பலவுள்ளன. ஒரு பெரிய வீதியில் நடுத்தரமான ஒருமாடி வீட்டை நாம் கவனிக்கவேண்டி யிருக்கிறது. அவ்வீடு மூன்று நாட்களுக்கு முன்பே வாடகைக்கு அமர்த்தப் பட்டு அந்த மூன்று நாட்களில் அலங்காரம் செய்யப்பட் டிருக்கிறது. அவ்வீடு மிக்க பெரிதல்லா விடினும் விசேஷ பணம் செலவிட்டு அலங்காரம் செய்யப்பட் டிருக்கிறது. அவ்வீட்டின் மாடியில் கீழே உயர்தரமான இரத்ன ஜமக்காளம் விரிக்கப்பட் டிருக்கிறது. அங்குள்ள சோபாக்கள் நாற்காலிகள் யாவற்றிலும் முகம்மல்லினல் தைக்கப்பட்ட மிருதுவான மெத்தைகள் விரிக்கப்பட் டிருக்கின்றன. பட்டில் பொன் வெள்ளிச் சரிகையினல் சித்திர வேலைகள் செய்யப்பட்ட திரைகள் நாற் புறங்களிலும் தொங்கவிடப்பட் டிருக்கின்றன. அம்மாடிமே லுள்ள ஒரு அகன்ற அறையில் ஒரு சோபாவின்மேல் நமது செல்வாம்பாள் உட்கார்ந்துகொண்டிருக்கிருள். அவள் எதிரில் ஒரு மேஜைமேல் ஒயின் வகைகளும், பழங்கள் பலகாரங்களும், வெள்ளிப் பாத்திரங்களிலும் தட்டுகளிலும் வைக்

கப்பட் டிருக்கின்றன. அம் மேஜை மேல் ஒரு பெட்டியில் நகைகளிருக்கின்றன. செல்வாம்பாள் நேர்த்தியான உடை யணிந்துகொண்டு அப்பெட்டியிலுள்ள நகைகளை யொவ்வொன்று யெடுத்துப் பார்த்துக்கொண்டிருக்கிறாள். இரண்டு வேலைக்காரப் பெண்கள் எதிரில் நின்றுகொண் டிருக்கிறார்கள். அவர்கள் வாலிபமும் அழகுமுடைய கன்னிகைகள். அவர்கள் நாணயமான உடைகளை யணிந்துகொண் டிருக்கிறார்கள்.

அப்பெட்டியையும் அதிலுள்ள விலையுயர்ந்த நகைகளையும் நோக்கினால், அவையாவும் அன்றுதான் புதிதாக வாங்கிவரப் பட்டவைகளென்று எவரும் அறிந்துகொள் ளலாம். அந்த வேலைக்காரப் பெண்களில் ஒருத்தியின் பெயர் அம்பாள், மற்றவள் பெயர் மீனாள். அவர்களுக்குள் நடந்த கீழ்க்காணும் சம்பாஷணையால் செல்வாம்பாளின் தற்கால நிலைமை ஒருவாறு விளங்கும்.

செல்வாம்பாள் :—அம்பாள்! இந்த நகைகள் எவ்வளவு நேர்த்தியானவைகள் பார்த்தாயா?

அம்பாள் :—ஆகா! என்ன நேர்த்தி! ஒவ்வொன்றும் தங்கள் அழகிற்குத் தக்க விதமாகப் பொறுக்கி யெடுக்கப் பட்டதே.

செல்வாம்பாளுக்கு இந்த முகஸ்துதியில் மிக்க பிரியமே. ஆயினும் ஏதோ பிரியப்படாதவள் போல் "ஒகோ! புகழ்ச்சி செய்கிறாயோ. என் கணவனை யெவ்வளவு வேண்டுமாயினும் புகழ்ந்து கூறு. என்னைப்புகழ வேண்டாம்" என்றாள்.

அம்பாள் :—அம்மா! நான் முகஸ்துதியாகக் கூறவில்லை. உள்ள உண்மையைக் கூற எண்ணினேனேயன்றி வேறில்லை. தங்கள் கணவர் தேர்ந்தெடுக்கும் பொருள்கள் ஒவ்வொன்றும் முதல்தர நேர்த்தி

யுடையதேயன்றி வேறில்லை. திருட்டாந்தமாய் அவர் மனைவியைத் தெரிந்தெடுத்ததைப் பார்க்கலாம்.

செல்வாம்பாள் :—அவர் யாவும் நேர்த்தியாகவே யிருக்க விரும்புகிறவர். ஆ! இம்முத்து மாலை ஒரு இராணிக்குத் தகுதியானது.

அம்பாள் :—அம்மா ஆடவர் மனதில் காதல் மட்டும் பற்றிக்கொண்டால் அது எவ்வளவோ காரியங்களைச் செய்து விடுகிறது. தங்கள் கணவருக்குத் தங்கள் மேலுள்ள காதல் எத்தகைய தென்பது இதோ இவைகளால் நன்கு விளங்குகிறதல்லவா. எவ்வளவு விலையுள்ள நகைகள்!

செல்வாம்பாள் :—ஆகா! அவருக்கு என்மேல் அளவு கடந்த அன்பிருக்கிற தென்பதில் ஐயமேயில்லை.

அம்பாள் :—"நான் கூறுவதற்கு மன்னிக்க வேண்டும். இப்போது தாங்கள் குறைவற்றதும் கலப்பற்றதுமான சந்தோஷத்தை யனுபவிக்க வேண்டுமென்றே நான் நம்புகிறேன். ஏனெனில் தங்கள் கணவர் தங்கள் பிரியத்திற்கு எள்ளளவும் மாறு கூறாத அத்தகைய பூரண அன்புடையவரா யிருக்கிறார். தங்களுக்குப் பிரியமான வஸ்துக்களில் ஒன்று கூட குறைவின்றி யிருக்குமாறு கவனிக்கிறார். மேலும் அவர் ஒரு செல்வப்பிரபுவின் குமாரர். ஏனம்மா! தாங்கள் சீக்கிரத்தில் அவருடைய குடும்பத்தார்க்கு அறிமுகமாக்கப் படுவீர்களல்லவா?" என்றாள்.

அதைக் கேட்டதே செல்வாம்பாள் திடுக்கிட்டு, "ஆம் ஆம். அது விஷயத்தில் என் கணவர் தமது தாய் தந்தையருக்குப் பக்குவமாக முன்னடி பிரஸ்தாபிக்க

வேண்டும். அதற்காகத்தான் இப்போது அவர் இங்கேயே யிராமல் அவர்களிடம் தினம் போய் வரவேண்டியதா யிருக்கிறது. நாங்கள் இரகசியமாகக் கலியாணம் செய்து கொண்டதால் அப்படி நேர்ந்தது.''

அம்பாள்:—ஆயினும் அவர் தங்கள் மேல் வைத்திருக்கும் அன்பிற்கு அளவேயில்லை. அப்படிக்கின்றேல் தங் கள் சௌகரியங்களை யுத்தேசித்து இவ்வளவு பொருட்செலவு செய்து இத்தகைய ஏற்பாடுகளைச் செய்யமாட்டார்.

செல்வாம்பாள் :—"ஆகா அதிற் சந்தேகமில்லை. இதோ பார். இந்த நகைகள் எவ்வளவு பெறும்படி யானவை. ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொக்கிஷம் எனலாமே'' என்றாள்.

நேயர்களே! இவ்வாறிருந்தாலும் செல்வாம்பாள் பூரண சந்தோஷ முடையவளாக விருக்கிறாளா? பார் வைக்கு அப்படி யிருப்பதுபோல் தான் தோன்றுகிறது. ஆயினும், ஒவ்வொரு வேளை இருந்தாற்போ லிருந்து அவள் முகத்தின் மேல் ஒருவித இருள் மூடுவதுபோல் தோன்றுகிறதே, அதேன்? ஒவ்வொரு சமயத்தில் அவள் சிந்தனை எங்கோ நெடுந்தூரத்தில் சென்றிருப்பது போல் தெரிகிறதே, அதேன் ? அவை போகப் போகத்தான் தெரியும்.

இவர்கள் சம்பாஷித்துக்கொண்டே யிருக்கையில், நடுவயதுள்ள ஒருமாது அங்கு வந்தாள். அவள் வீட்டுக் காரியஸ்தி. அவள் தன் எஜமாட்டியை நோக்கி,

"அம்மா! வந்த ஒயின், சாராயவகைகள் யாவற்றை யும் உக்கிராணத்தில் அடுக்கி வைத்தேன். இதோ இப் பட்டியில் நம்மிடம் வந்துள்ள தினுசுகளெல்லாம் அடித்து விடப்பட் டிருக்கிறது. இன்னும் பல நல்ல தினுசுக

ளிருக்கின்றன. நாம் வாங்கக் கூடியவற்றை நான் கறுப் புப் புள்ளிகளால் காட்டியிருக்கிறேன். தாங்கள் பார்வை யிட்டுக் கூறினால் அவற்றை வரவழைக்கலாம். உக்கிரா ணத்தில் இன்னும் இடமிருக்கிறது.'' என்றாள்.

செல்வாம்பாள் "ஆ!'' என்று அவள் கொடுத்த பட் டியைப் பார்த்து "சரி இப்போது மொத்தம் தொண்ணூறு டஜன் ஒயின் வகைகள் சாராயவகைக ளிருக்கின்றன. இத்தனைக்கும் நான் எப்போதோ ஒரு வேளைதான் அவற்றைத் தொடுபவள்'' என்றாள்.

காரியஸ்தி:—அம்மா! தாங்கள் விருந்து கேளிக்கை முத லியவை வைக்கத்தொடங்கினால் இவை சரசர வென்று பறந்து போம்.

செல்வாம்பாள்:—ஆயினும் இப்படிப்பட்ட விஷயத்தைப் பற்றி என் கணவரையே கேட்டுச் செய்வது நலம்.

காரியஸ்தி:—அம்மா! எஜமான் எல்லா விஷயங்களிலும் தங்கள் கட்டளையையும் விருப்பத்தையும் அனு சரித்தே நடந்து கொள்ளும்படி எனக்குக் கட்டளை யிட்டிருக்கிறார்.

செல்வாம்பாள்:—ஆ! என் கணவர் என் விஷயத்தில் மிக்க கருத்தோடு நடந்து கொள்கிறார். நமது அம் பாள் கூறியபடி அவருக்கு என்மே லிருக்கும் அன் பிற்கு ஓர் எல்லையே யில்லை.

காரியஸ்தி:—"சந்தேகமென்ன அம்மா? தங்கள் சௌகரி யத்திற்காக அவர் பணத்தை அளக்காமலே வாரி யல்லவோ இறைக்கிறார்.'' என்றாள்.

அச்சமயம் ஒரு வேலைக்காரன் அங்கு வந்தான். செல் வாம்பாள் அவனை நோக்கி "ஆ! போய் வந்து விட் டாயா?'' என்றாள். அவன் ஆமம்மா. நான் மிகக் கஷ்ட மில்லாமலே சுகவிலாசம் என்ற வீட்டைக் கண்டுகொண்

டேன். ஒரு வேலைக்காரி வந்து கதவைத்திறந்தாள். நான் கனம், கிருஷ்டப்பன்பிள்ளையின் வேலைக்காரன் என்று கூறி ஞானம்பாள் அம்மாளைக் காணவேண்டும் என்று இயம்பினேன்.

உடனே அந்தம்மாளே வந்தார்கள். அவர்கள் வாலிபமானவர்களே. நான் தங்கள் கடிதத்தை யந்தம்மாளிடம் அளித்தேன். அதை வாங்கிப்பார்த்ததே அந்தம்மாள் அடைந்த சந்தோஷத்திற்கோர் அளவேயில்லை. பிறகு தாங்கள் எப்போது வரப்போகிறீர்கள் என்று கேட்டேன். அந்தம்மாள் "நான் நீ போய் அங்கு சேர்ந்த கால்மணிக்குள் வந்து விடுவேன்" என்று கூறினார்கள்" என்றான்.

செல்வாம்பாள் உடனே வேலைக்காரனையும் காரியஸ்தியையும் போகும்படி கூறிவிட்டுத் தான் ஏதோ ஆழ்ந்த சிந்தனையிலிருந்தாள். சற்று நேரத்திற்குள் தெருக் கதவு தட்டப்பட்டதும் மறுநிமிடம் ஞானம்பாள் அறைக்குள் வந்தாள். சகோதரிகளிருவரும் ஆவலோடு ஆலிங்கனம் செய்து கொண்டார்கள்.

செல்வாம்பாள்:—ஓ! நீ மிக்க வாட்டமடைந்திருக்கிறாய். என்னால் உனக்கு மிக்க மனோவேதனை யுண்டாய் விட்டது.

ஞானம்பாள்:—இல்லை யில்லை. இப்போது மிக்க சந்தோஷமாகவே யிருக்கிறது. நீ கனம் கிருஷ்டப்பன் கூடச் சென்றாய் என்று எனக்குத் தெரியும்.

சேல்:—ஆ! தெரியுமா? எப்படி தெரியும்?

ஞானம்பாள், போலீஸ்காரன் ஷண்பகவல்லி வீட்டின் தோட்டத்திற்குப் பின்னால் செல்வாம்பாளும் ஒரு வாலிபனும் வண்டியில் ஏறிச்செல்வதைக் கண்டதாக

ஷண்பகவல்லி மூலமாய்த் தான் அறிந்த சங்கதியைக் கூறியபின், “எல்லா அடையாளங்களாலும் அவ்வாலிபன் கிருஷ்டப்பனுக்கே யிருக்கவேண்டுமென்று அறிந்து கொண்டேன். எப்படியாயினும் இப்போது என் மனம் சந்தோஷமாகவே யிருக்கிறது” என்று செல்வாம்பாளின் கரத்தைப்பற்றி முத்தமிட்டுக்கொண்டாள். அச்சமயம் அவள் கரத்தில் கலியாணக் கணையாழி யிருப்பதைக் கண்டு அதை யுற்று நோக்கினாள்.

செல்வாம்பாள்:—நான் உனக்குக் கடிதம் எழுதியே யிருப்பேன். ஆனால் விளையாட்டுத் தனமாக எனக்கென்று ஒரு வீடு ஏற்பட்ட பிறகு என் வீட்டிற்கே உன்னை வரவழைக்க வேண்டுமென்று வைராக்கியம் வைத்துக்கொண்டேன்.

ஞான.—இப்போது நீ பூரணசந்தோஷத்தோடிருக்கிறாயல்லவா?

செல்:—ஆகா. தடையின்றி. இதோ பார், இந்த வீடு எவ்வளவு பொருட் செலவிட்டு எப்படி யலங்கரிக்கப் பட்டிருக்கிறது. இச்சாமான்களைப் பார், இந்த நகைகள் நிறைந்த பெட்டியைப் பார். இதோ பார் என் பொன் கைக்கடிகாரம். இதன்றி அதோ மேஜை மேல் ஒரு அசல் வெள்ளிக்கடிகாரம். இன்னும் வீட்டில் உக்கிராணத்தில் ஒயின் வகைகள் மட்டும் தொண்ணூறு டஜன் இருக்கின்றன.

ஞான:—உன் கணவன் எங்கே?

செல்:—அவர் இச்சமயம் இங்கில்லை. அவர் தன் தந்தையிடம் பக்குவமாகக் கலியாண சங்கதியைக்கூற வேண்டியிருக்கிறது. அதனால் தினம் சில நாழிகைகள் அவர் அங்கிருக்கவேண்டி நேர்கிறது.

ஞா:—நீங்கள் மணம் முடிந்து இங்கு வந்து எத்தனை நாட்களாயின?

செல்:—இதோ பார் கலியாணம்-இதே...ஊம்-21௳ ஆயிற்று. நாங்கள் 23௳ இங்கு வந்தோம். இன்று 31௳.

ஞா:—சரியாக ஒருவாரமாயிற்று; நீ எனக்கறிவிக்கவே யில்லை.

செல்:—அப்படியல்ல. நாங்கள் வந்ததும் ஒரு ஹோட்டலில் தங்கினோம். இந்த வீட்டை ஏற்பாடு செய்து மூன்றே நாட்களாயின. மூன்று நாட்களில் இதை யலங்கரிக்கவும், சாமான்கள் முதலிய யாவும் வாங்கி யமைக்கவும் நல்ல வேலைக்காரர்களைப் பார்த்து அமர்த்திக்கொள்ளவும் எவ்வளவு வேலை.

ஞா.—அப்படியாயின் நீ யின்னும் உலகேசம் பிரபுவைக் காண வில்லையோ?

செல்:—இல்லை. ஆனால் அதைப்பற்றி அவசியமில்லை. என் கணவன் சீக்கிரம் எல்லாம் ஒழுங்குசெய்து விடுவார். அதற்கு இன்னும் காலம் இருக்கிறது. ஆ, நீ எழுந்துவா, இவ்வீட்டைப் பார்க்கவில்லையே. வா வா இதை முழுதும் பார். நான் செய்த குற்றத்திற்கு என்னை மன்னித்து விட்டாயல்லவா?

ஞா:—அதை யடியோடு மறந்துவிடு. நடந்தது நடந்து விட்டது. நீ சந்தோஷமாக விருப்பதை யறிந்தால் எனக்கு அதுவே மிக்க சந்தோஷம்.

செல்:—"ஆ! நான் பூரணசந்தோஷமாகவே யிருக்கிறேன். இதோ பார் என் கணவனது அன்பிற்கு அத்தாட்சிகளை. இந்த நகைகள் எவ்வளவு விலை பெறும் பார்-இருக்கட்டும். வா உன்னை யழைத்துப் போய் வீடு முழுமையும் காட்டுகிறேன்."

என்று கூறி ஞானம்பாளை யழைத்துக்கொண்டு அறையிலிருந்து புறப்பட்டாள். யாவும் பார்த்துக் கொண்டே செல்லும்போது ஞானம்பாள் பணத்திற்குத் தன் தந்தையின் கரத்தை யெதிர் பார்க்கவேண்டிய கிருஷ்டப்பன் இவ்வளவு பணம் எப்படி செலவழித்தான் என்று வியப்படைந்தாள். செல்வாம்பாள் வீட்டின் அலங்காரத்தையும் அதிலுள்ள சாமான் முதலியவற்றையும் அடிக்கடி தன் கணவனுடைய அன்பின் அத்தாட்சிகளென்று ஞானம்பாளிடம் கூறிக்கொண்டிருந்தாள். ஞானம்பாள் கொஞ்சத்தில் ஒன்றில் ஐயங்கொள்கிறவளல்ல. அப்படி யிருந்தும் தன் கணவன் அன்பிற்கு அத்தாட்சி யென்று செல்வாம்பாள் இவ்வளவு அடிக்கடி பன்முறை பாடம் படிப்பானேன் என்று அவள் மனதில் ஒரு கலக்கமுண்டாயிற்று. அதன்மேல் அவள் செல்வாம்பாளை நோக்கி, "உங்களுக்குக் கலியாணமானது எந்தவிடத்தில்?" என்றாள். செல்வாம்பாள் சற்று தடுமாற்றத்தோடு, "ஆ! அது நகரத்திலிருந்து மிக்கதூரம். ஒரு சிற்றூர் - ஐம்பது மைலோ நூறுமைலோ. அதன் பெயர் எலத்தூர். இதோபார் இவ்வீடு எவ்வளவு அழகாகச் சிங்காரிக்கப்பட் டிருக்கிறது? இதனாலேயே என் கணவனுக்கு என் மேலுள்ள அன்பு எத்தகையதெனத் தெரிகிற தல்லவா?" என்றாள்.

ஞானம்பாள் "ஏன்? நீங்கள் இருவருமே இங்கு வசிக்கிறபடியால் உன் சுகம் சௌகரியங்களைப்போல் தன் சுகத்தையும் சௌகரியத்தையும் அனுசரித்தே உன் புருடன் இவ்வளவு ஏற்பாடு செய்திருக்க வேண்டும். எப்படியோ, எல்லாவற்றையும் நோக்க உன் கணவனுக்கு உன்மேல் மிக்க அன்பிருக்க வேண்டுமென்றே தெரிகிறது" என்றாள்.

செல்வா:—ஆகா-சந்தேகமே யில்லை. என்வேலைக்காரிகள் இப்போதுதான் அவ்வாறு கூறிக்கொண் டிருந்தார்கள்.

ஞானு:--என்ன? உன் வேலைக்காரிகளா! இத்தகைய சங்கதிகளை வேலைக்காரிகளிடமா பேசுவது?

செல்வா:—“இவர்கள் முன்னமே என்மேல் மிக்க அன்புடையவர்களாகி விட்டார்கள். என் கணவன் அன்பைப்பற்றி இன்னொரு திருட்டாந்தங் காட்டுகிறேன் வா” என்று கூறித் தன் மேஜையருகி லழைத்துச் சென்று அதைத்திறந்து அதிலிருந்த சில இரசீதுகளை யெடுத்துக்காட்டி, இதோ சாமான்கள் வாங்கிய இரசீது, இதோ இது குதிரைகள் வண்டிகள் வாங்கிய ரசீது, இதோவெள்ளிச் சாமான்கள் வாங்கியது. இதோ இவையாவும் என் கணவன் என்னுடையதே யென்று கூறிவிட்டார்” என்ருள்.

இதைக்கேட்ட ஞானம்பாள் மனதில் ஒரு பீதியுண்டாயிற்று. ஏனெனில் ஒரு வீட்டையும் அதிலுள்ள சாமான்கள் முதலிய யாவற்றையும் கணவன் மனைவி இருவரும் பொதுவாகத் தங்களுடைய தென்று கருதி அனுபவிக்க வேண்டுமே யன்றி, கணவன் மனைவியை நோக்கி இவையாவும் உன்னுடையவை யென்று கூறுவது அவளுக்கு மிக்க வியப்பாகத் தோன்றியது; மேலும் கலியாணத் தகவலைப்பற்றி ஏதேனும் கேட்கும்போதெல்லாம் செல்வாம்பாள் அப்பேச்சைத் தட்டிவிட்டு வேறு விஷயத்தை யெடுத்துக் கொள்கிருளென்று ஞானம்பாளின் மனதிற் புலப்பட்டது.

அதற்குள் செல்வாம்பாள் ஞானம்பாளை நோக்கி “நீ போஜனத்திற்கு இங்கேயே தங்கவேண்டும். என் கணவர் போஜனத்திற்கு வரமாட்டார். ஏனெனில் அவர்

தந்தை வீட்டில் இன்று ஒரு பெரியவிருந்து நடக்கிறது'' என்றாள். ஞானம்பாள் அவ்வாறே ஒப்புக்கொண்டாள். இருவரும் போஜனம் செய்யும்போது, ஒரு பெரிய பரம் பரைச் செல்வச்சீமான் போஜனம் செய்யும்போது எப் படி அவன் குறிப்பறிந்து உபசரிக்க இரண்டு மூன்று பணியாட்கள் ஆயத்தமாக விருந்துகொண் டிருக்கிறார் களோ, அவ்வாறே செல்வாம்பா ளிடத்திலும் பணிப் பெண்கள் நின்று உபசரித்தார்கள். இதைக்கண்ட ஞானம்பாளுக்கு மனதில் வியாகூலமுண்டாயிற்று. தமது அந்தஸ்திற்குத் தகாத ஆடம்பரங்கள் அவளுக்குப் பிடிக்கவில்லை.

கடைசியில் போஜனம் முடிந்ததும் இருவரும் சற்று நேரம் சம்பாஷித்துக்கொண் டிருந்தார்கள். தன் சகோ தரி பூரண சுகத்தோடேயும் சந்தோஷத்தோடேயுமே யிருக்கிறாளென்று ஞானம்பாள் தன் மனதிற்குச் சமா தானம் கூறிக்கொண்டாலும், அவள் உள்ளத்தில் ஒரு விதக் கலக்கம் மட்டும் இருந்து கொண்டே யிருந்தது. கடைசியில் மணி ஒன்பதாயிற்று. ஞானம்பாள் நான் இனி வீட்டிற்குச் செல்லவேண்டும் என்றாள். செல்வாம் பாள் அப்படியானால் இதோ சீக்கிரம் வண்டி தயார் செய்யக் கட்டளை யிடுகிறேன்'' என்றாள்.

ஞானம்பாள் நான் போவதன் முன் ஒரு விஷயத் தைப்பற்றிக் கூற விரும்புகிறேன். அதாவது இப்போது நீ வேறு குடும்பத்தைச் சேர்ந்தவளாகி விட்டாய். ஆகை யால் நம்மிட மிருக்கும் பொருளில் சரிபாகம் உனக்குச் சேரவேண்டி யிருக்கிறது. அதை யெப்போது கொண்டு வரச் சொல்லுகிறாய்?'' என்றாள்.

செல்வாம்பாள் ''சகோதரியே! அவையாவும் உன் னுடையதே. நான் இப்போது நல்ல க்ஷேம நிலையிலிருக்

கிறேன். கொஞ்சகாலம் சென்றால் என் கணவனுக்கு அவர் தந்தையின் பட்டமும் திரண்ட செல்வமும் கிடைக்கும். அப்போது உன் சகோதரி ஒரு செல்வச் சீமாட்டி என்ற பெருமை யுனக்குண்டாகும். எனக்கு ஒரு காசும் வேண்டாம். யாவற்றையும் நீயே யெடுத்துக்கொள்'' என்றாள்.

ஞானம்பாள்:--“நீ யிருக்கும் நிலைமையைப்பற்றியும் இனி நீ யடையக்கூடிய பதவியைப் பற்றியும் எனக்கு மிக்க சந்தோஷமே. இப்போதுனக்கு அச்சொத்து வேண்டா மெனினும் உன் பாகத்தைப் பத்திர மாகவே நான் ஒரு பக்கம் வைத்து வைப்பேன். எப்போதாயினும் சரி உனக்கு வேண்டுமாயின் அது ஆயத்தமாக விருக்கும்'' என்றாள்.

செல்வாம்பாள்:—என் பிரியத்தை நான் கூறி விட்டேன். அம்மாளை யுனக்குத்துணையாக அனுப்புகிறேன். நான் வராததற்கு மன்னிக்கவேண்டும். எனக்கு வீட்டில் இன்னும் செய்யவேண்டிய வேலைகள் இருக்கின்றன. நான் நமது இராஜம்மாளுக்குக் கொடுக்கச் சில பரிசுகள் வைத்துக்கொண் டிருக்கிறேன். நீ போய் புறப்பட ஆயத்தப்படு, அதற்குள் நான் அவற்றை யெடுக்கிறேன்'' என்றாள்.

ஞானம்பாள் உடனே தன் மேல் உடைகளிருக்கும் அறைக்குச் சென்றாள். அங்கு சென்றதும் அவளை யறியாமலே அவள் மனதில் பெருந்துயரம் தோன்றியது. காரணமோ புலப்படவில்லை. அதை யடக்கமுடியாமல் உடனே அங்கிருந்த சோபாவில் சாய்ந்தாள். அவள் கண்களில் நீர் வடிந்தது. இரண்டொருநிமிடங்களில் தன் மனதைத்தேற்றிக் கண்களைத் துடைத்துக்கொண்டு மேல் போர்வையை யெடுத்து அணிந்து கொண்டாள். அச்சம

யம் தெருக்கதவை யாரோ கெட்டியாகத் தட்டுவது கேட்டது. உற்றுக்கேட்டாள்; கனம் கிருஷ்ணப்பன் வந்தான் என்று தெரிந்தது. உடனே அங்கிருந்த மெழுகு வத்தித் தீபத்தைக் கையில் எடுத்துக்கொண்டு மெதுவாக நடந்து செல்வாம்பாள் இருந்த அறையை நோக்கிச் சென்றாள்.

கிருஷ்ணப்பன் குடிவெறியோடு சற்று தள்ளாடிக் கொண்டே செல்வாம்பாள் இருக்கும் அறைக்குள் நுழைந்தவன் கதவைச் சரியாக மூடாமல் ஒரு கையால் தள்ளிவிட்டு உள்ளே சென்றான். எதிர்பாரா வண்ணம் அவன் வந்ததைக்கண்ட செல்வாம்பாள் மிக்க சந்தோஷமடைந்து "ஓ என் காதலரே! இங்கே யார் வந்திருக்கிறது தெரியுமா?" என்றாள். கிருஷ்ணப்பன் யார் யார் என்றதே "என் சகோதரி ஞானம்பாள்" என்றாள்.

கிருஷ்ணப்பன்—மிக்க சந்தோஷம். ஆனால் நீ. நீ. ஒன்றும் கூறவில்லையே?

செல்வாம்பாள்:—அப்பா! இல்லை யில்லை. எங்கேனுமுண்டா, ஆ! இதைப்பற்றி சீக்கிரம் செய்யவேண்டும். தங்கள் தந்தையிடம் கேட்டிரா?

கிருஷ்ணப்பன்:—மெதுவாகக் கொஞ்சம் குறிப்பாய்ப் பிரஸ்தாபித்தேன். இன்று அவர் எதற்காகவோ சிடு சிடுப்பாக விருக்கிறார்.

செல்வாம்பாள்:—அந்தோ துரதிஷ்டம். ஒவ்வொரு வேளையில் என் மனதில் இடி விழுந்ததுபோல் ஆகி விடுகிறது.

கிருஷ்:—இதோ! அவ்வாறு கூறாதே. நீயப்படி கூறினால் எனக்கு வியாகூலமுண்டாகிறது. உன் சௌகரியங்களுக்காக நான் பணச்செலவை முன்பின் பார்க்கிறேனோ?

செல்வா.—அது சரிதான் அந்தப் பயங்கரக் காட்சி நேர்ந்ததன் பின் நான் உம்மை யொரு வார்த்தை யேனும் கடிந்து கூறினேனா?

கிருஷ்ணப்பன்:—இல்லை யில்லை. அவ் விஷயத்தில் நீ மிக்க திருப்தியாகவே நடந்துகொண்டாய்.

செல்வாம்பாள்:—"ஆகையால் என் சுக வாழ்க்கையை நிலைக்கச் செய்யும் அந்த ஒரு விஷயத்தைச் சீக்கிரம் நிறைவேற்றி விடவேண்டும். என் சகோதரி எத்தனையோ கேள்விகளைக்கேட்டாள். எனக்குப் பெருந்திகிலாயிருந்தது. எங்கே உன் கலியாண பத்திரத்தை யெடு பார்ப்போம் என்று கேட்டிருந்தால் நான் என்ன பதில் கூறுவது? அவள்போன்ற கற்பரசியின் முன் நான் பேசாமல்பிராணத்தியாகம் செய்துகொள்ள வேண்டுமேயன்றி வேறு சிந்தனையால் பயனேயில்லை" என்றாள்.

அச்சமயம் அறைக்கு வெளியில் ஏதோ சிறியவஸ்து கீழே விழுந்ததுபோல் சத்தம் கேட்டு இருவரும் திடுக்கிட்டுக் கவனித்தார்கள். மறுவினாடி ஒரு ஆளே தடாலென்று வீழ்ந்ததுபோல் சத்தம் கேட்டது. தீபத்தை யெடுத்துக் கொண்டு இருவரும் வெளியில் ஓடினார்கள். வாயிற்படி யருகில் ஒரு ஸ்திரீ விழுந்து கிடப்பதைக்கண்டதே, செல்வாம்பாள் சட்டென்று அருகிற் சென்று குனிந்து பார்த்தாள். அங்கே மூர்ச்சையாய்க் கிடப்பது ஞானம்பாள் என்றறிந்தாள். உடனே பேரிடிவிழுந்தவள்போலாகி "அய்யோ கடவுளே! இவள் யாவும் தெரிந்து கொண்டாளே!" என்று அலறினாள்.

## 33-வது அத்தியாயம்.

### மாதின் தந்திர வஞ்சம்.

இச்சம்பவம் நடந்துகொண்டிருக்கும் அதேசமயத்தில் நகர உத்தியானவனத்தில் நடக்கும் இன்னொரு சம்பவத்தைப்பற்றிக் கூறவேண்டியது நமது கதையின் தொடர்ச்சிக்கு அவசியமாக விருக்கிறது. அதே வேளை, அதாவது இரவு ஒன்பதுமணி யிருக்கும், அப்போது நீலாட்சி தன் உடைக்குமேல் ஒரு போர்வையும் கறுப்புமுக மூடியும் அணிந்து கொண்டு நகர உத்தியான வனத்தின் வடக்குவாயிலில் நுழைந்து உள்ளே சென்றாள். அவள் குறித்த ஒருவிடத்தை நோக்கிச்செல்கிறாள். சற்றுதூரம் சென்றபோது அங்கு ஒருவன் நின்றுகொண்டிருந்தான்.

நீலாட்சி அவனைக் கண்டதும் ஆ! கண்ணுசாமி என்றாள். அவன் கனம் அச்சுதனுடைய வேலையாள் என்பதை நண்பர்கள் மறக்கலாகாது. அவன் நீலாட்சிக்குத் தாழ்ந்து வந்தனமளித்து விட்டு "அம்மா! நான் தங்களை நெடுநேரம் காக்கவைத்தேனா?" என்றான்.

நீலாட்சி:—"இல்லையில்லை, நான் இப்போது தான் வந்தேன், சரி சங்கதி என்ன? யாவும் விவரமாகக் கூறு!" என்றாள்.

கண்ணுசாமி:—"எஜமான் சுமார் ஆறுமணிக்குத் தான் வந்தார். வந்தவுடனே நான் தாங்கள் கொடுத்த கடிதத்தை அவரிடம் கொடுத்து 'எஜமானே! அன்று நாம் சுகவிலாசத்திற்கு அக்கன்னிகையைத் தூக்கிக்கொண்டு வரச்சென்றோமல்லவா! அன்று நமக்குச் சனியன்போல் ஒருமாது அங்குதோன்றி நமது காரியத்தை யடியோடு கெடுத்து விட்டாளே,

அம்மாதைத் தற்செயலாய் இன்று நான் கடைவீதி யிற் கண்டேன். அந்தம்மாள் இக்கடிதத்தைத் தங்க ளிட மளிக்கும்படி என்னிடம் கொடுத்தார்கள்' என்றுகூறி அக்கடிதத்தை யளித்தேன்.

அதைக் கேட்டதும் அவர் மிகக் கோபமடைந்தார். பிறகு கடிதத்தைப் பார்த்தபின் 'ஓகோ! அவள் மிக்க நிதானமாகவே எழுதுகிறாள். இரவு ஒன்பதரை மணிக்கு நகர உத்தியான வனத்தில் என்னைச் சந்திக்கவேண்டு மென்கிறாள். நான் அன்று கூறியவாறு ஏதேனும் ஏற் பாட்டிற்கு ஒப்புக்கொள்வாள் போலும்என்றார்' ''என்று கூறினான்.

நீலாட்சி மிக்க வெறுப்பான பார்வையோடு ஆ! அவன் இன்னும் என்னைப் பணத்தால் சமாதானப்படுத்தி விடலாமென்று கனவு காண்கிறான். இருக்கட்டும் எப் படியும் இங்கு என்னைச் சந்திக்க வருவான் என்று நம்பு கிறாயல்லவா? என்றாள்.

வேலைக்காரன்:—"அம்மா கட்டாயம் வருவார், தாங்கள் எனக்குச்செய்யும் உதவியை நான் மறப்பவனல்ல. நான் என்னால் கூடியவரை அவரைப் பயமுறுத்தி னேன். எப்படி யெனில், 'அய்யா! அது மிக்க கெட்டசம்பவம். அதைத் திருப்திகரம் செய்துவிடு வீர்களென்று நம்புகிறேன்' என்றேன். அதற்கவர் 'ஆகா செய்துவிடலாம். அவள் பிறகு சிந்தித்துத் தான் ஏற்படுத்திய நிபந்தனை நடக்காத காரியம் என்று அறிந்துகொண் டிருப்பாள்' என்றார். நான் எஜமானே! ஒன்று சிந்திக்கத்தக்கது, அம்மாது ஆத்திரப்பட்டு அக்கடிதத்தைக் கொண்டுபோய் தங் கள் தந்தையாகிய பிரபுவிடம் காட்டினால் மிக்க தொல்லையாகு மன்றோ! அவர் என்னைக்கூப்பிட்டுக்

கேட்பார். நான் அதில் சாக்ஷி கையொப்பம் வைத்திருக்கிறேன். பிறகு என்பாடு அதோ கதியாகும்' என்றேன். அதற்கவர் 'உனக்காகத் தான் நீ பெருந்திகில் அடைந்திருக்கிறாய்' என்று கொஞ்சம் வெறுப்போடு கூறினர்.

நான் 'அய்யா! தயவுசெய்து பாருங்கள், என் பிழைப்பே போய்விடும்' என்றேன். அவர் 'எப்படியிருந்தாலும் நான் எங்கேனும் அவளை மணம்புரிய முடியுமோ?' என்றார்.

நான் 'அய்யா! நான் அதற்குக் கூறவில்லை; இன்னொன்று; அம்மாது அக்கடிதத்தைத் தன் பெரியதந்தையிடமளித்து வியாஜ்ஜியம் செய்யும்படிகூறினல் என்செய்வது? அவர் மிக்க சாமார்த்தியம் பொருந்திய வக்கீல் என்பது தெரிந்தவிஷயம். அச்சங்கதி வெளிவரும்போது நாமிருவரும் அந்த நடு இரவில் சுகவிலாசத்திற்குள் நுழைந்தது முதலியயாவும் வெளிவந்துவிடும். என் நல்ல நற்சாட்சி பத்திரங்களே என் ஜீவனத்திற் காதாரம். அவைபோனல் பிறகு என்னை யொருவரும் சேர்க்கவே மாட்டார்கள்?' என்றேன். கடைசியில் அவர் 'சரி இதோடு இதை நிறுத்து நான் எப்படியேனும் திருப்தியாகச் சமாதானம்செய்து கொள்கிறேன் என்றார்' " என மொழிந்தான்.

நீலாட்சி நீ செய்த உதவிக்கு மிக்க சந்தோஷமடைகிறேன். இதோ இப்பையில் இருபது சவரன்களிருக்கின்றன எடுத்துக்கொள். உன் எஜமானுக்கு உன்விஷயம் தெரிந்துவிடு மென்பதற்குக்கூட அஞ்சாமல், நீ முடிவு வரையில் எனக்கு உதவியாக விருப்பாயல்லவா" என்று பணப்பையை யவனிடமளித்தாள்.

கண்ணுசாமி "ஆகா! சந்தேகமின்றி என் வேலை

போய்விட்டாலும் அவசியமில்லை. தாங்கள் எனக்கு வேறு வேலையளிப்பதாக வாக்களித் திருக்கிறீர்கள், மேலும் தாராளமாகப் பணமளிக்கிறீர்கள்" என்றான். நீலாட்சி "என் வாக்குப்படி நான் கட்டாயம் செய்வேன். உன் எஜமான் தூரயாத்திரை செல்வதாயின் உன்னை யழைத் துச் செல்வானோ?" என்று வினவினாள்.

கண்ணுசாமி:—அவசியம் கூட்டிச் செல்வார். ஆனால் ஒரு சமயம் அது யாருக்கும் கூறலாகாத இரகசியமாயின்.

நீலாட்சி:—அது நானும் உன் எஜமானும் செல்கிற பிர யாணமே.

கண்ணுசாமி:—அப்படியாயின் கட்டாயம் என்னை யழை த்து வருவார். எங்கே.....

நீலாட்சி:—"இப்போது அவசரமில்லை. பின்னால் கூறுகி றேன். இனி நாம் பிரிந்துசெல்ல வேண்டியதே - நான் அவரைச் சந்திக்க வேண்டிய இடத்திற்குச் செல்கிறேன்" என்றாள்.

வேலைக்காரன் அவள் பிரியப்படி நடப்பதாக வாக் களித்து விட்டுச் சென்றான்.

நீலாக்ஷி அத்தோட்டத்தில் அச்சுதனைச் சந்திக்க ஏற்பாடுசெய்த இடத்தருகிற் சென்று அவன் வரவிற்கு எதிர் பார்த்திருந்தாள். சுமார் கால்மணிநேரங் கழித்து கனம் அச்சுதன் அங்குவந்தான் -நீலாட்சி முகமூடியணிந் திருந்தாலும் உருவத்தால் அவள் நீலாட்சிதானென்று அறிந்து கொண்டான். அவன் வாயில் சுருட்டை வைத் துக்கொண்டு அவளுக்காகச் சற்றும் அஞ்சாது மிக்க அலட்சியமாகக் கருதுபவன்போல் காணப்பட்டான். ஆயினும் நீலாட்சி இதுவெளி அபிநயம் என்று தெரிந்து கொண்டு அவன் அருகில் நெருங்கி "ஆ! வருவாய் என்று தெரியும்" என்றாள்.

அச்சுதன் அப்போதுதான் அவளென்று அறிந்து கொண்டவன்போல் "ஆ! நீலாட்சி, நீயா?" இந்தமுக மூடியால் நான் முதலில் நீயென்று நினைக்கவேயில்லை" என்றான். நீலாட்சி வெறுப்போடு "சரி இப்போது தெரிந்துவிட்டதல்லவா, போதும். தவணை பத்து நாட்களும் கழிந்தன. இந்தப்பத்து தினங்களாக உன்னிடமிருந்து சமாசாரம் வருமென்று நான் வீணாக எதிர்பார்த்திருந்தேன்" என்றாள்.

அச்சுதன்:—ஆ! நானல்லவோ! நீ அன்று இரவு நடந்த நாடகக்காக்ஷியை எவ்விதமாக மதிக்கிறாயென்றும், அச்சந்தர்ப்பத்தில் இரண்டு துப்பாக்கிகளோடு அங்கு எவ்வாறு முளைத்தாயென்றும் அறிய ஆவலுள்ளவனாக விருக்கிறேன்.

நீலாட்சி:—"ஆகா! அதைப் பற்றி விவரிக்கிறேன் சற்று பொறுமையாக மட்டும் கேட்க வேண்டும். அன்று கள்ளத்தெருவில் நான் உன்னைச் சந்தித்துப்பேசிய போது நீ என்னை யடியோடு மோசம்செய்யவே தீர்மானித்துவிட் டிருக்கிறாய் என்று தெரிந்து விட்டதல்லவா? அப்போது நான் உன்மேல் பூரண வஞ்சம் தீர்த்துக் கொள்வதாகச் சபதம் செய்து கொண்டேன். ஆகையால், உன்னை விட்டுப் பிரிந்ததே நேராய் ஒரு கடைக்குச் சென்று இரண்டு கைத்துப்பாக்கிகளை வாங்கிக்கொண்டு நீ இன்னொரு ஸ்திரீயைக் காதலிப்பதை நான் அறிந்தால் உடனே ஒரு துப்பாக்கியால் உன்னைச் சுட்டு வீழ்த்திவிட்டு, மற்றொரு துப்பாக்கியால் என் உயிரை மாய்த்துக் கொள்வது என்று எனக்குள் தீர்மானித்துக்கொண்டேன். அது முதல் அத்துப்பாக்கிகள் எப்போதும்

என்னிடம் ஆயத்தமாக விருந்து வருகின்றன. இப்போதும் என்னிடம் இருக்கின்றன'' என்றாள்.

அக்கன்னிகையின் மொழிகளைக் கேட்டதே அவன் முகம் வெளுத்துவிட்டது. இதுகாறும் அவள் நடந்து கொண்ட மாதிரியையும் இப்போது அவள் கூறும் துணிகரத்தையும் கருதியபோது இவள் கூறுகிறபடி செய்யக் கூடியவளே என்று அவன் மனதிற்பட்டது. அவன் உடனே பிடித்துக்கொண்டிருந்த சுருட்டை வெடுக்கென்று வாயினின்றும் பிடுங்கிக் கீழே யெறிந்துவிட்டு மௌனமாக அவளை நோக்கினபடியிருந்தான்.

நீலாட்சி கூறத்தொடங்கி, "அன்றிரவு நான் அங்கிருக்க நேர்ந்தது எவ்வாறெனின், ஞானம்பாள் தன் சகோதரியின் பிரிவால் மிக்க வியாகூலமுற்றிருந்தாளாதலின் இரண்டொருநாள் அவள்கூட வசிக்கக்கருதி அங்கு சென்றிருந்தேன். அன்றிரவு போஜனத்திற்குப் பின் நான் படுக்கைக்குச் சென்றபோது நித்திரை வராதபடியால் ஒரு கதைப் புத்தகத்தை வாசித்துக்கொண் டிருந்தேன். திடீலென்று ஞானம்பாள் அறையில் ஒருவிதச் சந்தடி யுண்டானதைக் கேட்டுத் துப்பாக்கிகளைக் கையில் பிடித்துக்கொண்டு அங்கு வந்தேன். நீ முகமூடி யணிந்திருந்தாலும் உன்னை நான் அறிந்துகொண்டேன். அதன்மேல் உன் கூடவந்தவன் உன் சிநேகனாகவாவது உன் வேலைக்காரனாகவாவ திருக்கவேண்டுமென்று அறிந்துகொண்டேன். முதலில் உன்னை யுடனே சுட்டு வீழ்த்தி என் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்வதெனக் கருதினேன். அச்சமயம் அப்படிச் செய்தால் நான் பிராணத்தியாகம் செய்துகொள்ளவேண்டிய அவசியம்கூட இல்லை. ஏனெனில் எனக்குத் தண்டனைப் பயம் இல்லை. கள்ளனைச் சுட்டேன். நடு இரவில் அவ்வாறு வந்தவன் முகமூடிக்

குள் கனம் அச்சுதன் இருக்கிறனென்று யாரேனும் சந்தேகிக்கலாகுமோ...'' என்றபோது அச்சுதன் குலை நடுங்கிவிட்டது. அவள் சொல்லும் விவகாரம் சரியானதேயென்று அவன் மனதில் நன்ருய்ப்பட்டது. அன்று தன் பிராணன் மயிரிழை தப்பியது என்று கருதினன்.

நீலாட்சி:—'' நான் சுடக்கருதியபோது திடீலென்று இன்னெரு யோசனை என் மனதிற்பட்டது. அதன் பிறகே அவ்வாறு எழுதிக்கொடுக்கும்படி கேட்டேன். இப்போது அந்தப் பத்து தினங்களும் கழிந்துவிட்டன. இப்போதென்ன, அந்த நிபந்தனையின்படி என்னை மணம்புரிந்து கொள்ளப்போகிருயா! இல்லையா! கூறு'' என்ருள்.

அச்சுதன் சற்றுநேரம் சிந்தித்தான். அவன் மனதிற் பெருங்கலக்கமுண்டாய்விட்டது. கடைசியில் மிக்க தடுமாற்றத்தோடு '' நீலாட்சி! நீயே சிந்தித்துப் பார். நான் உன்னை எவ்வாறு மணம் செய்யலாகும். அப்படிச் செய்ய சாத்தியப்படாது என்று நான் கூறுவதாயின்?'' என்று சொல்லிவிட்டு அவள் எங்கே சட்டென்று துப்பாக்கியை யெடுத்துச் சுட்டு விடுவாளோ வென்று பீதியுடன் அவள் கரத்தை நோக்கிக்கொண் டிருந்தான்.

நீலாட்சி '' ஆ! நான் இத்தகைய விடையை எதிர்பார்க்காமல் இங்கு வந்தவளல்ல. இப்படிக் கூறுவாயென்றே தெரியும். அதனல்தான் இந்தப் பத்து தினங்களாகப் பேசாமலே யிருந்தேன்.'' என்றதே அச்சுதன் பிராணதண்டனையிலிருந்து மன்னிப்பு பெற்றவன்போல் சந்தோஷமடைந்து, '' ஆ! நீலாட்சி! இப்போது நீ யோசனையோடு பேசுகிருய். உன் மனதிற்கே புலப்படுகிறது பார்த்தாயா?'' என்றன்.

நீலாட்சி '' மேலும் இந்தப் பத்து நாட்களாகச் சிந்

தித்ததில் எனக்கு இன்னொரு விஷயம் மனதிற்குப் புலப் பட்டது. அதாவது அம்மாதிரி பலவந்தத்தின்மேல் நடக்கிற கலியாணத்தால் இருவர்க்கும் சந்தோஷமான வாழ்க்கை யேற்படாதென்பது நிச்சயம். முதலிலேயும் எனக்கிது தெரியும். ஆயினும் அப்படி யெழுதி வாங்கி ஞல் நீ என்னை மணம்செய்து கொள்ளாவிடினும் எனக்கு நிலையான ஜீவனுதாரமாவது ஏற்படும் என்று கருதினேன். ஆனுல்...'' என்பதற்குள் அச்சுதன் நம்மைப் பிடித்த சனி யொழிந்ததென்று மிக்க சந்தோஷமடைந்து "ஆ! இப்போ நீ மிக்க புத்திசாலித் தனமாகப் பேசுகிருய்'' என்று அவளைப் புகழ்ந்து கூறத் தொடங்கினுன்.

நீலாட்சி "இரு இரு. நான் உன்னை யந்த நிபந் தனையிலிருந்து விடுவிப்பதாயினும் இன்னொரு நிபந்தனை யிருக்கிறது. அதன்படி செய்ய ஒப்புக்கொள்ளவேண்டும். அது நீ எனக்கு ஒரு பெரிய உதவி செய்ததாக வாகும்'' என்ருள்.

அச்சுதன்:—வேறெதுவாயினும் சரி, செய்யச் சித்தமாக விருக்கிறேன். அதில் சற்றும் ஐயமில்லை.

நீலாட்சி:—தூரத்திலுள்ள ஒரு நகரில் என் அத்தை யொருத்தியிருக்கிருள். அவளைப்பற்றி முன்பு உனக்கு இரண்டொரு முறை கூறியிருக்கிறேன்.

அச்சுதன்:—ஆம் ஆம். வயது முதிர்ந்த அத்தை. உன் னைத் தன்னிடமே வந்து விடும்படி. எழுதியிருந் தாள். நீ அவ்வாறு செய்யச் சம்மதிக்கவில்லை.

நீலாட்சி:—ஆம் அவளே. அவளிடம் முப்பதினுயிரம் பவுன் ரொக்கம் இருக்கிறது. நான் கம்பனூரி லிருந்து இங்கு வந்துவிட்ட பிறகு அவள் அச்சங் கதியை யறியாது தனக்குச் சினேகரான ஒரு வர்த்த கரைக்கொண்டு என்னைப்பற்றிக் கம்பனூரில் விசா

ரித்துத் தெரிவிக்கும்படி ஏற்பாடு செய்தாள். அதனுல் எப்படியோ நான் கல்லூரியில் வாசிக்கும் ஒரு மாணவனிடம் நட்பாக விருக்கிறேன் என்ற பிரஸ்தாபம் அவளுக்கெட்டி விட்டது.

அச்சுதன்:—அந்தோ! நான் கடவுளறிய ஒருவரிடமும் உன் சங்கதியைப்பற்றிக் கூறியதேயில்லை.

நீலாட்சி:—"ஆனுல் உனக்கு நட்பாக விருந்த அக்கிழவி? அக்கிழவியிருந்த வீட்டில் அவளுக்குப் பின்னுல் வந்திருந்தமாது? இந்த இருவரில் யார் மூலமாகவோ சங்கதி என் அத்தைக்கு எட்டிவிட்டது. நடந்தது நடந்துவிட்டது. அதைப்பற்றி இப்போது மோசம் ஒன்றுமில்லை: என் அத்தை நான் உன்னை மணம் செய்துகொண்டே யிருப்பேன் என்று எண்ணிக் கொண்டிருக்கிருள். மற்ற விபரீதம் ஒன்றும் அவளுக்குத் தெரியாது. இப்போது அவள் மிக்க காயலாவாக இருக்கிருள். ஆகையால் இப்போது என்னைத் தன் ஆஸ்திக்குப் பாத்தியஸ்தி யாக்கிவிட ஆவல் கொண்டு நீண்ட ஒரு கடிதம் எழுதியிருக்கிருள். நேற்றுதான் அக்கடிதம் வந்தது. இதோ அக்கடிதம் நீயே இதை வாசித்துப்பார்" என்று கூறிக் கொண்டே ஜேபியிலிருந்து ஒரு கடிதத்தையெடுத்து அவனிடம் கொடுத்தாள். அது பெரிய கடிதமாக விருக்கவே, அச்சுதன், "இருக்கட்டும், இதிலிருக்குஞ் சங்கதியை நீயே கூறினுற்போதும்" என்றுன்.

நீலாட்சி:—"அப்படியாயின் கூறுகிறேன். அவள், தான் மிக்க வியாதியுற்றிருப்பதால் நான் என் கணவனை யழைத்துக்கொண்டு ஒரு நாளேனும் தன்னிடம் வந்திருந்தால் என்னைத் தன் ஆஸ்திக்குப் பாத்தி

யஸ்தியாக்கி விடுவதாக எழுதி யிருக்கிறாள்.'' என்றாள்.

அச்சுதன்:--ஆ மிக்க நல்ல மூதாட்டி, முப்பதினாயிரம் பவுன்! கவனிக்கவேண்டியதே.

நீலாட்சி:—நீ ஆரூருக்குப்போயிருக்கிறாயா?

அச்சுதன்:—நான் எப்போதும் போகவில்லை.

நீலாட்சி:—அங்குதான் என் அத்தை யிருக்கிறாள்.

அச்சுதன்:—முப்பதினாயிரம் பவுனை அலட்சியமாகக் கருதலாகாது. உனக்குச் செய்யவேண்டிய உதவி எதுவாயினும் நான் செய்வேன். இப்போது நான் செய்யவேண்டிய உதவி இன்னதென்று எனக்குத் தெரிகிறது. நான் உன் கணவனைப்போல் இரண்டொரு நாட்களுக்கு நடிக்கவேண்டியது.

நீலாட்சி:—உனக்கு அப்பணம் அலட்சியமாகத் தோன்றலாகும். எனக்கு அது பெரிய செல்வம். ஆகையால் இதில் எனக்குப் பூரணமாக உதவி செய்வாய் என்று நம்புகிறேன்.

அச்சுதன்:—ஆகா, இரண்டு நாட்களல்ல, நான்கு நாட்களல்ல, ஒருவாரம் வேண்டுமாயினும் இருக்கிறேன். நான் நல்ல அன்புள்ள புருஷனாக இருப்பேன். நாம் செய்யவேண்டியது ஒரு அற்ப விளையாட்டுச் சங்கதி தானே.

நீலாட்சி:—அவ்வளவே.

அச்சுதன்:—அப்படியாயின் என்னை யவசியம் வரும்படி கூறுகிறாய்? எப்போது செல்லவேண்டும்?

நீலாட்சி:—என் அத்தை மிக்க அசௌக்கிய முற்றிருக்கிறாள். எந்த சமையம் இறந்து விடுவாளோ தெரியாது. ஆதலால் சற்றும் ஆலசியம் செய்யலாகாது.

அச்சுதன்:—என்னுல் ஆலசியமில்லே. நான் ஆயத்தமாய் உடனே வேண்டுமாயினும் புறப்படுகிறேன்.

நீலாட்சி:—சரி நாளே காலே பத்துமணி வண்டிக்குப் புறப் பட்டால் இரவு ஒருமணி இரண்டுமணிக்கு ஆரூர் போய்ச் சேருவோம். நாம் முதலில் ஒரு கௌரவ மான ஹோட்டலில் இறங்கவேண்டும்.

அச்சுதன்:—ஆகா நான் சரியாக ஒன்பது மணிக்கே இரயில் ஸ்டேஷனில் வந்திருக்கிறேன். என் வேலேக் காரனேயும் அழைத்து வருகிறேன்.

நீலாட்சி:—அதுதான் சரி. நாம் செல்வமுடையவர்கள் போலவும், அன்பினுல் அவளேக்காணச் சென்ருேமே யன்றி, அவள் சொத்தைக் கருதி வரவில்லே யென் றும் தோன்றும்படி நடந்துகொள்ள வேண்டும்.

அச்சுதன்:—"ஆம். அவற்றைப்பற்றி எனக்கு அதிகம் கூறவேண்டாம். நான் எப்படியாவது தாராளமாகச் செலவு செய்யப் பணம் கொண்டு வருகிறேன். ஒரு முதற்றரமான ஹோட்டலிலேயே போய் இறங்கு வோம். நான் மிக்க அன்புடைய கணவனுக நடிப் பேன் என்பதில் சற்றும் ஐயம் இல்லே." என்ருன்.

அவன், "நீலாட்சிக்கு ஆஸ்தியும் வருவதால் அவளால் நமக்கு எள்ளளவும் தொந்திரை யில்லாமற் போகும். அதோடு அவள் பெறும் ஆஸ்தியிலும் கொஞ் சம் நாம் தட்டிக்கொள்ளலாம்" என்று கருதிக் கொண் டான்.

நீலாட்சி:—"சரி காலே ஒன்பது மணி, ஒன்பதரை மணிக் குள் நான் ஸ்டேஷனுக்கு வந்து விடுவேன்" என் ருள். அச்சுதன் தான் அதற்கு முன்பே வந்து விடுவதாய்க் கூறியபின் இருவரும் பிரிந்து போனுர் கள்.

## 34-வது அத்தியாயம்.

### வஞ்சத்தின் அதிசய முடிவு.

தினம் அச்சுதனை விட்டுப் பிரிந்த நீலாட்சி நேராக ஒரு இரசாயன ஔஷத சாலைக்குச்சென்று, மயக்கத்தை யுண்டாக்கும் ஒருவிதப் பாஷாண மருந்தை வாங்கிக்கொண்டு வீட்டிற்குச் சென்றாள். தான் நேரம் கழித்து வந்ததற்கும், பிரயாணம் போய் வருவதற்கும் தந்திரமாக ஏதோ சாக்கு கூறிவிட்டாள். அவளுடைய பெரிய தாயாகிய லாயர் தம்புசாமியின் மனைவி அவள் கூறியதை நம்பிக்கொண்டாள்.

மறுநாள் காலை ஒன்பது மணிக்குமேல் நீலாட்சி பிரயாணத்திற்கு ஆயத்தமாகி இரயில் ஸ்டேஷனுக்குச் சென்றாள். அச்சுதனும் அவன் வேலை யாளாகிய கண்ணுசாமியும் முன்னடியே அங்கு வந்திருந்தார்கள். அச்சுதன் அவளைக்கண்டதும் "ஆ! நான் முன்னமே டிக்கட்டுகளை வாங்கிவிட்டேன். நம்மிருவருக்கும் முதல் வகுப்பு வண்டியில் ஒரு தனி யறைக்குக் கார்டினிடம் கொஞ்சம் கைக்கூலி கொடுத்து ஏற்பாடு செய்துவிட்டேன். ஒரு அறையில் நாமிருவருமே நிம்மதியாக விருக்கலாம், என் வேலைக்காரன் இரண்டாவது வகுப்பில் வருவான்." என்றான்.

சரியாய்ப் பத்து மணிக்கு இரயில் வந்ததும் மூவரும் அதில் ஏறிக்கொண்டார்கள். அச்சமயம் அச்சுதனுக்குத் தெரியாமல் நீலாட்சியும் அச்சுதன் வேலைக்காரனாகிய கண்ணுசாமியும் சமிக்கையாகப் பேசிக்கொண்டார்கள். ஐந்து நிமிடங்களுக்கெல்லாம் வண்டி புறப்பட்டது.

நீலாட்சி அச்சுதனிடம் உண்மையாகவே மிக்க அன்புடையவள்போல் நடித்தாள். அதனால் அச்சுதன் மிக்க சந்தோஷமடைந்தான். இரயிலில் வேடிக்கை

யாய்ப் பிரயாணம் செய்வது அவனுக்கு மிக்க குதூகல மாக விருந்தது. நீலாட்சியின் அன்பான உபசாரங்கள் உண்மையானவை யென்றே அவன் நம்பினான். அந்தோ ஸ்திரீயின் வஞ்சமாகிய மாயவலையில் சிக்கிய மூடர்களு க்கு அறிவு விளக்கம் எங்கேனுமுண்டோ.

சுமார் நான்கு மணிக்குப் பிரயாணிகள் சிற்றுண்டி யருந்துவதற்காக ஒரு ஸ்டேஷனில் வண்டி அரைமணி நேரம் நின்றது. அச்சுதனும் நீலாட்சியும் வண்டியிலிருந்து இறங்கி ஸ்டேஷனிலுள்ள ஹோட்டலுக்குச் சென்று சிற்றுண்டி யருந்தத் தொடங்கினார்கள். அப்போது ஒருவகைச் சாராயம் பரிமாறப்பட்டது. நீலாட்சி "சே சே! நான் இதை யருந்துவதேயில்லை," என்றாள். அச் சுதன் "உனக்கெது பிரியம் ?" என்றான்.

நீலாட்சி "எனக்கு ஒயின்தான் பிரியம். அதையும் இப்படி அவசரமாக அருந்துவது எனக்குப் பிரியமில்லை. அத்தகைய பானத்தைச் சாவதானமாகப் பேசிக் கொண்டே யருந்தவேண்டும்" என்றாள்.

அச்சுதன் :—"ஏன் ! ஒரு புட்டியும் கொஞ்சம் பலகாரங் களும் வாங்கி நமது வண்டியறையிலேயே வைத்துக் கொண்டாலென்ன ?" என்றான்.

நீலாட்சி "அப்படியாயின் உனது வேலைக்காரனுக்கு அவ்வாறு கட்டளையிட்டு விடு" என்றாள். அப்படிக் கூறியபின், அச்சுதன் எழுந்து வருவதற்கு முன்பே நீலாட்சி எழுந்து வெளியில் சென்று அங்கிருந்த வேலைக் காரனிடம் "உன் எஜமான் ஒயின் வாங்கிவரச் சொல்லு வார். இதோ இந்தப் புட்டியிலிருப்பதை அதில் விட்டு விடு. பத்திரம் நமது காரியம் இதனால் தான் நிறைவேற வேண்டும்" என்று கூறித் தான் மருந்துக் கடையில் வாங் கிய சிறிய புட்டியை யவனிடம் கொடுத்தாள். அவன்

அதை வாங்கிக்கொண்டு குறிப்பாக அவ்வாறே யாகட்டும் என்று கூறினன்.

பிறகு அச்சுதன் வந்ததும் கண்ணுசாமியிடம் பணம் கொடுத்து "ஒரு புட்டி உயர்தர ஒயினும் தின் பண்டங்களும் வாங்கி வந்து எங்கள் வண்டியில் வை என்றான். கண்ணுசாமி அவ்வாறே செய்தான். வண்டியும் புறப்பட்டது. நீலாட்சி அச்சுதனிடம் மிக்க அன்போடு பேசத் தொடங்கி "உனக்குப் பிரியமாயின் சுருட்டுப்பிடி. எனக்கு ஒரு ஆக்ஷேபனையு மில்லை" என்றாள்.

அச்சுதன் மிக்க சந்தோஷமடைந்தான். இவள் தொந்திரவு அடியோடு ஒழிந்தது என்று சந்தோஷத்தோடு இப்போது அவளிடமிருந்தே கொஞ்சம் பொருள் பறிக்கலா மென்ற சந்தோஷமும் இருந்ததால், அவன் அறிவே மழுங்கிவிட்டது. மாலைப் பொழுதாய் விட்டது.

அச்சுதன் தன் காதலியை நோக்கி இனிக் கொஞ்சம் ஒயின் அருந்தலா மென்றான். நீலாட்சி யுடனே ஒரு கண்ணுடிக் கிண்ணத்தில் நிறைய ஒயினை விட்டு அவன் கரத்திலளித்தாள். அவன் அவளையும் அருந்த வேண்டு மென்றான். அவள் அவ்வாறே வேறொரு கிண்ணத்தில் கொஞ்சம் விட்டுத் தன் கரத்தில் வைத்துக் கொண்டாள். அச்சுதன் குடிக்க ஆரம்பித்தான். அதே சமயம் நீலாட்சியும் குடிப்பவள் போல் கிண்ணத்தை வாயில் வைத்து ஆ அதோ! என்ன உன்னதமான நாட்டு மாளிகை யென்றாள். அச்சுதன் சட்டென்று தலையைச் சாளரத்திற்கு வெளியில் நீட்டிப் பார்த்தான். அச்சமயம் நீலாட்சி தன் கிண்ணத்திலிருந்த ஒயினை வெளியில் ஊற்றிவிட்டுக் கடைசி பாகத்தை யருந்துகிறவள் போல் கிண்ணத்தை வாயில் வைத்துக்கொண்டு, அச்சுதன் தன்

பக்கம் திரும்பும் போது அதைக் கீழேவைத்து நாக் கைத்தட்டி ருசிபார்ப்பவள் போல் அபிநயித்தாள்.

அச்சுதன் தன்னிடம் இருந்ததை யருந்திவிட்டு "இந்தச் சுருட்டைப் பிடித்ததால் ஒயின் வாய்க்கு உப் புக்கரிப்பதுபோ லிருக்கிறது" என்றான். கன்னிகை "அப்படித்தா னிருக்கும். எனக்கு நன்றாகவே யிருக் கிறது" என்றாள்.

இன்னும் கொஞ்ச நேரங்கழித்து அச்சுதனுக்கு இன்னும் கொஞ்சம் ஒயின் கொடுத்தாள். அவன் அவளை யருந்தும்படி கூறும்போ தெல்லாம் அவள் முன் போலவே தந்திரமாக அதை வெளியில் ஊற்றிக்கொண் டிருந்தாள். மயக்க மருந்து கலக்கப்பட்ட ஒயினைக் குடிக்கக் குடிக்க அச்சுதனுக்குச் சமாளிக்க முடியாத மயக்க முண்டாகி விட்டது. அவன் நீலாட்சியை நோக்கி,

"இதென்ன இந்த ஒயின் இவ்வளவு மயக்கத்தை யுண்டாக்குகிறதே. சுருட்டும் கூடவே பிடித்ததாலோ?" என்றான்.

நீலாட்சி :—"அப்படித்தா னிருக்க வேண்டும். உனக்கு உறக்கம் வரின் சற்று நேரம் நித்திரை செய்யலாமே" என்றாள்.

அச்சுதன் தன்னாலானவரை சமாளித்துப் பார்த் தான். அவனால் குந்தியிருக்க முடியவில்லை. கடைசியில் படுத்து விட்டான். பொழுதும் அமர்ந்து விட்டது. இரவு வந்தபின் நீலாட்சி, கண்ணுசாமி இவர்கள் இரு வருடைய தந்திரத்தால் இரண்டொரு அதிசயமான சம் பவங்கள் நிகழ்ந்தன. இரவும் பாதிக்கு மேல் கழிந்து விட்டது. இதற்கிடையில் இரண்டு மூன்று முறை காடா காரமான நித்திரையில் ஸ்மரணையற்றிருக்கும் அச்சுதன்

வாயில் மயக்க மருந்து கலந்த ஒயின் ஊற்றப்பட்டது. அதனால் அவன் அந்த நிலைமையிலேயே யிருந்தான்.

கடைசியில் அச்சுதன் விழித்துக் கொண்டு கண்களை மெதுவாகத் திறந்து பார்த்தான். இரயில் போவதாகத் தெரியவில்லை. உற்று நோக்கினன். தான் ஒரு அதிசய மான புது விடத்தில் படுத்துக்கொண் டிருப்பதாகத் தோன்றியது. புத்தி மிக்க கலவரமான நிலைமையி லிருந்தது. இரயில், நீலாட்சி, சுருட்டு, ஒயின், எல்லாம் ஒரே குழப்பமாக விருந்தது. தீபவொளியில் தான் இருப்பது ஒரு வீட்டின் அறையென்று தெரிந்தது. பக்கத்தில் படுத்திருக்கும் ஆளின் முகத்தை யுற்று நோக்கி அவள் நீலாக்ஷியென்று அறிந்தான். பிறகு நிதானமாக இரயி லில் பிரயாணம் செய்ததும் சுருட்டு பிடித்துக்கொண்டே ஒயின் குடித்ததும் யாவும் சரியாக நினைவிற்கு வந்தன.

அச்சுதன் மறுபடி நீலாட்சியின் முகத்தை நோக்கிய போது அவள் கண்விழித்துப் பார்த்து "ஆ! விழித்துக் கொண்டாயா. இப்போது எப்படி யிருக்கிறது சுகம்?" என்று மிக்க அன்போடு வினவினள்.

அச்சுதன் "அப்பா எனக்குத் தலையிடி அதிகமாக விருக்கிறது. நாவரட்சியும் அதிகம். கொஞ்சம் சோடா குடித்தால் நலமாக விருக்கும்" என்றான். நீலாட்சி "நீ கேட்பா யென்றுணர்ந்தே இதோ ஆயத்தமாக வர வழைத்து வைத்திருக்கிறேன்" என்று கூறிக்கொண்டே ஒரு புட்டி சோடாவை யொரு பாத்திரத்தில் விட்டுக் கொடுத்தாள்.

அச்சுதன் அதை யருந்தியபின் "ஆம் அச்சுருட்டே. இப்போது நாம் எங்கிருக்கிறோம்?" என்றான். நீலாட்சி "எங்கிருப்போம் ஆரூரில் தான்" என்றாள். அச்சுதன் மணி என்ன வென்றான். கன்னிகை யுடனே கடிகாரத்தை

யெடுத்துப் பார்த்தாள். மணி மூன்றுகிறது. ஆனால் சற்றும் அஞ்சாமல் பதினொன்றரை மணி யென்றாள். உண்மையில் அவர்கள் அங்கு வந்து இரண்டு மணிநேரமே ஆகிறது. ஆனால் அவள் ஒரு காரியார்த்தமாக அவ்வாறு பதினொன்றரை மணி யென்று கூறவேண்டி யிருந்தது.

அச்சுதன் "ஆ! எவ்வளவு நேரம் நான் தூங்கி விட்டேன்!" என்றான்.

கன்னிகை:—இங்கு வந்ததும் உன்னைப் படுக்கவைத்து விட்டோம். ஆனால் நான் பதினொன்றரை மணி வரையில் நித்திரை செய்யவில்லை. நானும் கண்ணுசாமியும் எங்களால் கூடியவரையில் உன்னை எழுப்ப முயன்றோம். நீ எழுந்திருக்கவே யில்லை." என்றாள்.

அச்சுதன்:—அப்பா! நான் ஒரு போதும் இப்படி யிருந்ததில்லை. இதென்ன வென்று எனக்கு விளங்கவில்லை.

நீலாட்சி:--ஒயினாலல்லவே உனக்கு அசௌக்கியம் நேர்ந்தது. உனக்குமுகத்தில் இரத்தம் ஏறிவிட்டது. உனது முகம் சிவந்து போய்ப் பயங்கரமாக விருந்தது. நானும் உன் வேலைக்காரனும் எங்களால் கூடிய வரையில் உன்னை எழுப்ப முயன்றும் முடியவில்லை;

அச்சுதன்:—"என்னை யிங்கெப்படி கொண்டு வந்தீர்கள்? இந்த ஹோட்டலிலுள்ள அனைவரும் என்ன எண்ணிக் கொண்டார்களோ...பேஷ்..." என்பதற்குள்,

நீலாட்சி:—"இல்லை யில்லை; நான் பக்குவமாகக் கூறி விட்டேன். 'என் கணவனுக்கு பித்தசோகம் வருவதுண்டு, நாளை சுகமாய் விடும்' என்று கூறினேன்" என்றாள்.

அச்சுதன்:—என்னை யெப்படி இங்குகொண்டு வந்தீர்கள்?

நீலாட்சி :—ஒரு வண்டியிலேற்றி இங்கு கொண்டு வந்து விட்டோம். கண்ணுசாமிக்கு முன்னடி கூறி விட்டேன்.

அச்சு :—ஆ! உன்னுடைய முன்யோசனே மெச்சத் தகுந்தது. நீ செய்தது முதல் தரமான யோசனே.

நீலா :—இல்லா விட்டால் எப்படி? நீ நாளே முழுமையும் வெளியில் செல்லாமல் அறையிலேயே யிருக்க வேண்டும். அப்போதுதான் உனது தேகம் சுகமாகத் தோன்றும். அது வரையில் நாம் இங்கு வந்திருக்கிற சங்கதி என் அத்தைக்குத் தெரிவிக்க மாட்டேன். நாம் எப்போது வந்தோ மென்பது அவளுக்குத் தெரியாத வரையில் அதைப்பற்றி அவசியமில்லே. அப்படித் தெரிந்து விட்டால் பித்த மூர்ச்சை வந்து விட்டதாகக் கூறிவிடலாம்.

அச்சுதன் :—ஆம். நீ கூறுவததான் தகுதி. என் தேக சுகம் இருக்கிற மாதிரிக்கு எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. நாளே முழுதும் நிம்மதியாகவே யிருக்க வேண்டும். நாம் புருடன் மனேவிபோல் நடிப்பதைப் பற்றிக் கண்ணுசாமிக்குக் கூறினயல்லவா?

நீலா :—அதைப்பற்றி அவனிடம் நான் ஒன்றுமே கூறவில்லே. அவன் முகத்தைப் பார்க்கவே எனக்கு வெட்கமாக விருக்கிறது.

அச்சுதன் :—நான் அவனுக்குக் குறிப்பாய்க் கூறி யிருக்கிறேன்.

நீலா :—அவன் உண்மையானவன்ருனு?

அச்சு:—சேசே! அவனேப் பூரணமாக நம்பலாம். இன்றேல் அவனே நான் அழைத்து வருவேனு?

நீலா :—"அப்படியாயின் பயமில்லை. நீ சற்று நித்திரை செய்வது நலம்" என்றாள்.

அச்சுதனுக்கும் உறக்கமாகவே யிருந்த படியால் உடனே நித்திரை போய் விட்டான். மறுபடி விழித்த போது பொழுது நன்றாய் விடிந்து விட்டது. அவன் விழித்துக் கொண்டதை யறிந்ததே நீலாட்சி யருகிற் சென்று இப்போது உனக்கு எப்படி யிருக்கிறதென்றாள். அச்சுதன் "சுமாராகவே யிருக்கிறது. ஆனால் சிரசுதான் மிக்க பாரமாகத் தோன்றுகிறது" என்றான். நீலாட்சி "ஆ! இது உனக்கு இரத்தம் முகத்தில் ஏறியதென்பதற்கு இன்னொரு அத்தாட்சி. நீ படுக்கையிலேயே யிரு. நான் ஆகாரம் கொண்டுவரச் சொல்லுகிறேன்" என்று கூறி மணியடிக்கும் கயிற்றை யிழுத்தாள்.

உடனே ஹோட்டல் வேலைக்காரிகளில் ஒருத்திவந்து அச்சுதனுடைய தேகசுகத்தைப் பற்றி விசாரித்து விட்டுக் காலைப் போஜனத்திற்கு என்ன வேண்டுமென்று வினவினாள். நீலாட்சி அவளை நோக்கி "என் கணவருக்குச் சுகமில்லை. படுக்கையிலேயே போசனம் செய்வார்—" என்று வேண்டிய உணவுப் பொருள்களை வேலைக்காரி யிடம் கூறினாள். அவள் அவற்றைக் கொண்டுவரச் சென்றாள்.

அச்சுதன்:—இதென்ன? இவர்கள் பாஷை மலைநாட்டுப் பாஷையைப் போலவே இருக்கிறது.

நீலாட்சி :—ஆம். நான்கூட அப்படித்தான் கேள்விப் பட்டேன்.

சற்று நேரத்திற்குள் வேலைக்காரி ஆகாரம் எடுத்துக் கொண்டு வந்தாள். இருவரும் ஆகாரம் புசித்தபின் படுக்கையிலேயே யுட்கார்ந்திருந்தார்கள். அச்சமயம் ஹோட்டல்காரி வந்து நீலாட்சியை நோக்கி "ஏனம்மா! தங்கள்

கணவருடைய தேகசுகம் எப்படியிருக்கிறது?" என்றாள். அச்சுதன் "இப்போது கொஞ்சம் சுகமே. நான் சற்று முன்புதான் என் மனைவியிடம் கூறிக்கொண் டிருந்தேன். இங்கே பேசும்......" என்பதற்குள்.

நீலாட்சி ஹோட்டல்காரியை நோக்கி, "என் கணவர் இன்றைக்கெல்லாம் பேசாமல் நிம்மதியாக விருந்தால் சுகமடைவார். அதனால் அவரிடம் நாம் பேசாமலிருப்பது நலம்" என்றாள். ஹோட்டல்காரி "ஆம் ஆம் நான் போய் வருகிறேன். வேண்டிய சௌகரியங்களுக்குக் கேளுங்கள்" என்று திரும்பினாள்.

அச்சுதன் :—"மிக்க வந்தனம். தங்களன்பைப் பற்றி என் மனைவி கூறினாள்" என்றான்.

ஹோட்டல்காரி அப்படி அன்போடு ஒன்றும் கூறவில்லை யாதலின் மிக்க வியப்போடு சிந்தித்துக்கொண்டே சென்றாள். நீலாட்சி, அச்சுதன் எழுந்து போய் சாளரத்தின் வழியாய் வெளியில் பார்க்காவண்ணம் தந்திரமாகவே "நீ பேசாமலே படுக்கையில் இருப்பது நலம். இன்றேல் மறுபடி முன்போல் இரத்தம் ஏறினால் மிக்க தொந்திரை யுண்டாகும்" என்று கூறி, அவன் அருகில் படுக்கையில் உட்கார்ந்து கொண்டேயிருந்தாள்.

மாலைப்பொழுதானபோது ஹோட்டல் வேலைக்காரன் வந்து இராப்போசனத்திற்கு என்னசெய்வதென்று அச்சுதனை மிக்க மரியாதையோடு கேட்டான். அச்சுதன் "அதைப்பற்றி என் மனைவியே கூறுவாள், அவள் ஏற்பாட்டின்படிதான் போஜன விஷயம் நடக்க வேண்டும்" என்றான். நீலாட்சி யுடனே போஜனத்தைப் பற்றி ஏற்பாடு செய்தாள்.

அறையில் தீபங்கள் பிரகாசமாக எரிந்துகொண் டிருந்தன. போஜனம் முடிந்ததும் அச்சுதன் சற்று உல

வலாமென்று அறையில் உலவிக்கொண் டிருந்தவன் சாளரவழியாகப் பார்த்து விட்டு "நீலாட்சி! இந்த ஆரூர் இவ்வளவு அழகான நகரமென்று நான் நினைக்க வில்லை" என்றான். நீலாட்சி "நீ இதைப்பார்த்ததில்லை யென்று கூறினையல்லவா" என்றாள்.

அச்சுதன் "ஆம், இதுகாறும் நான் இங்கு வந்ததே யில்லை. அதோ தெரியும் பெரிய கட்டிடங்களையும் அவற் றின் மாதிரியையும் பார்த்தால் இராஜ கிரியைப்போலவே யிருக்கிறது" என்றான்.

நீலாக்ஷி:—"அப்படியாயின் இராஜகிரி மிக்க அழகிய நகரமாக விருக்கவேண்டும். இந்நகரின் பிரதான பாகமும் மிக்க கம்பீரமானதே" என்றாள். அச்சு தன் வியப்போடு "ஆ! அதோ தெரிகிற அப்பிரம் மாண்டமான கட்டிடம் இராஜகிரி அரண்மனை யென்றே நான் கூறுவேன்" என்றான்.

நீலாக்ஷி:—"ஏன்? அதுதான் ஆரூர் மாளிகை-இது மிக்க பிரசித்தி பெற்றதாயிற்றே. ஆ! நீ யின்னும் திரிந்து கொண் டிருக்கலாகாது-பேசாமல் படுத்துக்கொண்டு நிம்மதியாக நித்திரை செய்தால்தான் காலையில் பூரண சுகத்தோடு எழுந்திருப்பாய். வா என் அன்பே!" என்று அவன் தோளைப்பற்றி யழைத் துக்கொண்டு போய் மஞ்சத்தில் படுக்கவைத்து விட்டாள்.

அந்தோ! பெண்வலையில் சிக்கியவன் ஏமாறுவது மிக்க கஷ்டமோ! மறுநாள் பொழுது விடிந்ததும் அச்சு தன் தேகசுத்தி செய்துகொண்டபோது தேகம் பூரண சுகமடைந்ததா யுணர்ந்து சந்தோஷமடைந்தான். நீலாட் சியை நோக்கி காலைப்போஜனத்திற்கு ஏற்பாடு செய்வ தற்காக வேலைக்காரியை யழை என்றான். ஹோட்டல்

வேலைக்காரி, ஹோட்டல் எஜமானி இருவரும் இவர்க ளிருக்கும் அறைக்குள் வந்திருக்கிறார்கள். ஹோட்டல் வேலைக்காரன் மட்டும் இன்னும் அங்கு வரவில்லை.

நீலாட்சி “பேஷ்! போஜன ஏற்பாடு வேலைக்காரிக்கு தானா தெரியும்!” என்று கூறிவிட்டு ஹோட்டலிலுள்ள பிரதம வேலைக்காரனைக் கூப்பிட்டாள். அவன் வந்ததும் “அம்மா தங்கள் கணவர் சுகமடைந்தாரா?” என்றான். நீலாட்சி என் கணவர் இப்போது பூரணசுகமடைந்தார். இப்போது காலைப்போஜன ஏற்பாட்டைப்பற்றிக் கூறவே உன்னைக் கூப்பிட்டோம்” என்றாள்.

வேலைக்காரன் அச்சுதனை நோக்கி, மரியாதையோடு வந்தனமளித்து விட்டு, “அய்யா! தங்கள் கட்டளை யென்னவோ கூறினால் அப்படியே நடந்துகொள்வேன்” என்றான். அச்சுதன் “போஜன ஏற்பாட்டைப்பற்றி என் மனைவியையே கேட்டு அவள் பிரியம் போல் செய்ய வேண்டும்” என்றான்.

அவ்வாறே நீலாட்சி ஏற்பாட்டின்படி வேலைக்காரன் உடனே சென்று காலைப்போசனத்திற்கு வேண்டிய பண் டங்களையெல்லாம் கொண்டுவந்து வட்டித்தான். போஜ னம் முடிந்ததும் அச்சுதன் ஒயின் அருந்திச் சற்று நேரத்திற்குள் உற்சாகமடைந்து எழுந்து உலவிக் கொண்டே சாளரத்தை நோக்கிச் சென்றான். நீலாட்சி சட்டென்றெழுந்து அவனருகிற்சென்றாள். அச்சுதன் சாள ரத்தின் வழியாய்ப் பார்த்துவிட்டு மிக்க வியப்போடு “ஆ! இது ஆரூர்தான் என்று எனக்குத் தெரிந்திராவிட் டால் இந்நகரம் இராஜகிரியே என்று கூறுவேன். அதோ கோட்டை...” என்பதற்குள்,

நீலாட்சி அவன் தோளைப்பற்றிக்கொண்டு “என் காதலரே யாவும் பின்னால் பார்க்கலாம்; நாம் இனி ஆலசி

பம் செய்யாமல் என் அத்தையைப் போய்க்காணவேண்டும். வா!" என்று கூறி அவனை சோபாவருகில் அழைத்துச் சென்று உட்காரவைத்து "ஆ! நான் என் அத்தைக்கு ஒரு கடிதம் எழுதியனுப்புகிறேன். நீயும் முகஸ்துதியாக ஒன்றெழுதி பதில் வைத்தனுப்பினால் அவளுக்கு ஆனந்தமாகி விடும்" என்றான்.

அச்சுதன் மிக்க உற்சாகத்தோடு "ஏன் அது நல்ல வேடிக்கையாகவே யிருக்கும். நான் எழுதத்தடையென்ன இருக்கிறது. அவசியம் எழுதுகிறேன். நீ சொல்லிக்கொண்டே வா" என்றான். நீலாட்சி யுடனே கடிதம் முதலிய எழுது கருவிகளை யெடுத்து அவனிடமளித்தாள். பிறகு அவள் கூறியபடி அச்சுதன் கீழ்க்காணும் இலிகிதத்தை வரைந்தான்:—

"தேவரீர் அம்மா அவர்களுக்கு கனம் அச்சுதன் நமஸ்காரம் செய்து எழுதிக்கொண்டது. எதையும் எழுதுமுன் நான் ஒரு விஷயத்தைப்பற்றித் தங்களை மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். அதாவது தங்கள் அன்பார்ந்த சௌ-நீலாட்சியை நான் மணம் புரிந்து கொண்டதற்காக முன்னாடி தங்கள் அனுமதியைப் பெற்றுக்கொள்ளத் தவறியதற்காக என்னை மன்னிக்க வேண்டுகிறேன். அதற்குக்காரணம் நான் நீலாட்சியின் மேல் கொண்டிருந்த காதலால் ஒரு சமயம் அவளை மணம்புரிய ஏதேனும் ஆக்ஷேபனை யுண்டாய் விடுமோ என்று அஞ்சியதே யாகும். இதனால் என் பிரியமான மனைவியாகிய நீலாட்சியின் மேல் நான் கொண்டிருக்கும் அன்பு எத்தகையதெனத் தாங்களே யறிந்துகொள்ளலாகும். இதனாலேயே எங்கள் கலியாணம் இரகசியமாகவே நிறைவேற வேண்டியதாயிற்று. கூடிய சீக்கிரத்தில் என் அன்பார்ந்த நீலாட்சியை என் மனைவியாக என் தாய் தந்தையர் ஏற்

186500

றுக்கொள்ளும்படி செய்வேன். தாங்கள் அசௌக்கியம் என்பதைக் கேட்டதே என் மனைவி மிக்க வியாகூலமுற்றாள். எனக்குத் தங்களைக்கண்டு தங்கள் ஆசீர்வாதத்தைப் பெற ஆவலாக விருந்ததோடு, என் மனைவியின் கூடவே யிருந்தால் அவளுக்குச் சற்று தேறுதலாக விருக்குமென்பதையும் கருதியே நானும் வந்தேன். இரவு நெடுநேரங் கழிந்து நாங்கள் வந்ததால் அகாலத்தில் தங்களுக்குச் சிரமையளிக்க மனமில்லாமலே ஹோட்டலில் தங்கினேம். கூடிய சீக்கிரம் வந்து தங்களைச் சேவித்துக்கொள்வோம். இப்படிக்குத் தங்கள் அன்பிற்குரிய சௌ-நீலாட்சியின் கணவன் அச்சுதன்''

இக்கடிதம் எழுதி முடிந்ததும் அச்சுதன் அதை நீலாட்சிக்கு மறுபடி வாசித்துக்காட்டி "நீ கடிதம் எழுது!'' என்றான். நீலாட்சி அக்கடிதத்தை வாங்கிக் கொண்டு "நான் முன்னமே யெழுதி உறையில் போட்டு வைத்திருக்கிறேன். இதையும் அதில் அடக்கம் செய்து தபாலுக்கனுப்பவேண்டியதே'' என்று வாயிற்படி யருகில் சென்று கண்ணுசாமியைக் கூப்பிட்டு, தன் ஜேபியிலிருந்த கடித உறையை யெடுத்து அதில் இக்கடிதத்தையும் வைத்து ஒட்டி, "கண்ணுசாமி! இதைக் கொண்டு போய்த் தபாலில் போட்டு விட்டு வா. சீக்கிரம்'' என்று குறிப்பாய்ச் சமிக்கை செய்தாள்.

கண்ணுசாமி யுடனே சென்றான். நீலாட்சி சட்டென்று திரும்பி வந்து அச்சுதன் அருகில் நெருங்கி யுட்கார்ந்து "ஆ! ஒரு மணிநேரத்திற்குள் நமது கடிதம் என் அத்தைகைக்கு எட்டிவிடும். அவள் மிக்க சந்தோஷமடைவாள்'' என்றாள். அச்சுதன் "இது ஒரு நல்ல வேடிக்கையாக விருக்கும். அக்கிழவிமுன் நாம் எல்லா விஷயத்திலுமே உண்மையான கணவன் மனைவி போலவே நடந்து கொள்ளவேண்டும்'' என்றான்.

இவர்கள் இவ்வாறு சுமார் இருபது நிமிடங்கள் வரைபேசிக்கொண் டிருந்தார்கள். அதன் பின் நீலாட்சி ஏதோ சொற்பவேலையாக அறையை விட்டுச்சென்று இரண்டு மூன்று நிமிடங்களுக்குள் திரும்பி வந்தாள். அச்சமயம் அச்சுதன் சாளரத்தில் நின்று கோட்டையைப்பார்த்துக்கொண் டிருப்பதைக் கண்டாள்.

அச்சுதன் முகம் விகாரமடைந்து நீலாட்சியை நோக்கி "ஓ நீலாட்சி! இதென்ன அக்கோட்டை அடடா இது இராஜகிரி மாளிகை ? ஓ அதோ பக்கத்தில் அப் பெரிய கோயில். ஓ! இல்லை யில்லை. நாம் இராஜகிரி யிலேயே யிருக்கிறோம். ஆம் இது இராஜகிரியே, இவ்வீதி வடக்கு மாடவீதி. என்ன? இது என்ன அர்த்தம்.?" என்று மிக்க கலவரத்தோடும் ஆவலோடும் கேட்டான்.

நீலாட்சி சாந்தமாகவே, "ஆம். என்ன அர்த்தமா? இது இராஜகிரிதான். மலைநாட்டின் தலை நகரம். இத் தேச ஆசாரப்படிக்கும் சட்டப்படிக்கும் நாம் உண்மையாகவே புருடன் மனைவி யென்றும், இது நம் நாட்டிலும் சட்டப்படி செல்லு மென்றும் அர்த்தம்" என்றாள்.

உடனே அச்சுதன் மனதில் பேரிடிவிழுந்தது. அவன் அடியுண்டவேங்கை போல் அவள் மேல் பாயப் போனவன், அவள் நிலையைக் கண்டஞ்சி ஆசனத்தில் சாய்ந்து விட்டான்.

---

## 35-வது அத்தியாயம்.

### வஞ்சத்தின் முடிவு.

இப்போது நாம் மேல் கூறிய மலைநாட்டின் ஆசாரங்களில் ஒன்றைப்பற்றிக் கூறிவிட்டுப் பிறகு கதையைத் தொடங்கவேண்டி யிருக்கிறது.

மேல் நாட்டின் ஆசாரப்படி ஒரு வாலிபனும் கன்னிகையும் கலியாணம் செய்து கொள்வது சற்றும் கஷ்டமில்லாத காரியம். தங்கள் பெற்றோர்களுக்குத் தெரியாமலே எங்கேனு மொரு கிராமத்திற்குப் போய் ஒருமணி நேரத்தில் கலியாண வேலையை முடித்துக்கொள்ளலாம். இந்த ஆசார ஊழலாலும், ஒரு வாலிபனும் கன்னிகையும் தாராளமாகப் பேசலாம், உலவச்செல்லலாம், என்ற கட்டுப்பாடில்லாத ஆசாரத்தாலும் அந்நாடுகளில் அனேகம் கன்னிகைகள் பெரிய ஆபத்துக்குள்ளாகித் தவிப்பது சாதாரணம்.

மேல் நாடுகளில் ஒன்றாகிய இந்த மலைநாட்டில் அக்காலத்தில் இருந்த ஆசாரம் இன்னும் ஊழலானது. அதாவது ஒரு ஆடவனும் ஒரு ஸ்திரீயும் நான்குபேரறியப் பகிரங்கமாக புருடன் மனைவி யென்று நடந்து கொண்டால் அவர்கள் முறைப்படி கலியாணம் செய்து கொண்ட கணவன் மனைவியாகவே மதிக்கப் படுவார்கள். சட்டப்படி அது அங்கீகாரம் செய்யப்படும். அந்த ஆசாரம் அடுத்த நாட்டிலும் சட்டப்படி அங்கீகாரம் செய்யப்படும்.

இப்போது நமது அச்சுதன் எத்தகைய இக்கட்டில் சிக்கிக்கொண்டான் என்பதை இதை வாசிப்போரே உணர்ந்து கொள்ளலாகும். நீலாட்சி இந்த நாட்டுச்சட்டப்படி நீ என் கணவன் என்றதே, அச்சுதன் மனதில் இதுகாறும் சற்றும் புலப்படாதிருந்த பல விஷயங்கள் இப்போது புலப்பட்டன. இவள் முன் யோசனையோடு சதியாலோசனை செய்து தந்திரமாய் நம்மை ஏமாற்றி விட்டாள் என்று அவன் புத்தியிற்பட்டது. அவன் முகம் சவம்போல் வெளுத்துவிட்டது. அவ்ன் மனதில் கொண்டிருந்த அபிப்பிராயத்திற்கும் சந்தோஷத்திற்கும் அடியோடு அழிவு நேர்ந்தது. அவன் மனமுடைந்து பெருந்

துக்கமும், கோபமும், கலக்கமும் உண்டாயின. என்ன செய்வான் பாபம்!

நீலாட்சியோ நிதானமான மனதோடு, சற்றும்கலக்கமின்றித் தன் காரியம் தன் பிரியப்படி பூரணமாகச் செயமடையும் என்ற நம்பிக்கையுடையவள் போல் தைரியத்தோடு நிற்கிறாள். சற்று நேரம் இருவரும் ஒருவரையொருவர் நோக்கியபடி மௌனமாகவே யிருந்தார்கள். கடைசியில் நீலாட்சி "என் காதலரே! உமக்கு உமது மரியாதையைக் கெடுத்துக்கொள்ளவும், காண்போர் உம்மை ஏளனம் செய்து நகைக்கவும் பிரியமில்லாதிருந்தால், இந்த விடத்தில் வீண்குழப்பம் செய்து கொள்ளாமல் பேசாமலிரும்'' என்றாள்.

அச்சுதன்:—ஓ கடவுளே! பெருஞ் சூதானதந்திரம். சே! இது கவைக்கு ஒரு போதும் உதவாது.

நீலாட்சி:—"அய்யா! வீணாக இத்தகைய குருட்டு யோசனையால் மோசம்போகவேண்டாம்-தன்னைத் தானே ஏமாற்றுகிறவன் பெரிய முட்டாளாவான்.'' என்றாள்.

அச்சுதன் மனதில் ஒரு சமயம் இவள் கூறுகிறபடியே தான் முடியுமோ என்று ஒருபக்கம் திகிலாகவே யிருந்தது. ஆயினும் கோபத்தோடு, "இப்படிப்பட்ட சூதினால் கூட எங்கேனும் ஒருவனைக் கணவன் என்று பத்தப்படுத்த முடியுமோ. ஒரு காலுமில்லை. என்ன? ஒரு ஹோட்டலிலிருக்கும் இரண்டொரு வேலைக்காரர்களெதிரில் உன்னை மனைவியென்று கூறிவிட்டதாலேயே நீ உண்மையாகவே மனைவியாகிவிட லாகுமோ? ஒரு காலுமில்லை.

நீலாட்சி:—அவசரப்படாமல் சற்று சாந்தமாகச் சிந்தித்துப்பார் - நான் செய்தது தந்திரந்தான். அதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் நடந்திருக்கும்

விஷயங்கள் எவ்வளவு திட்டமாக நடந்தேறி யிருக்கின்றனவென்று யோசி.

இதோபார், முதலாவதாக நீ என்னைப் பத்துநாட்களுக்குள் மணம்புரிந்து கொள்வதாக எழுதிக்கொடுத்திருக்கிறாய்: அந்தப் பத்துநாட்கள் கழிந்ததே நாமிருவரும் இம்மலைநாட்டிற்கு வந்திருக்கிறோம். இங்கு ஹோட்டல் முதலாளி, ஹோட்டல் வேலைக்காரி, வேலைக்காரன் இவர்கள் முன்னிலையில் பன்முறை என்னை மனைவியென்று கூறியிருக்கிறாய். இதுமட்டுமல்ல. என்முக்கியமான சுற்றத்தாருக்கு எழுதிய கடிதத்தில் நீ என்னை இரகசியமாக மணம் புரிந்து கொண்டதாகவும், கூடியசீக்கிரத்தில் உன் தாய்தந்தையர் என்னைத் தங்கள் மருமகளாக ஏற்றுக் கொள்ளும்படி செய்யப் போவதாகும் வெளிப்படையாகக்கூறி யிருக்கிறாய்.

அச்சுதன்:—ஓ ! இது அடியோடு பெருமோசம். ஆரூரில் உன் அத்தையென்ற ஒரு சுற்றத்தாள் உனக்கிருக்கிறாள் என்பதே பெரும்பொய் என்று கருதுகிறேன்.

நீலாட்சி:—“என்ன ? என் பெரியதந்தையாகிய லாயர் தம்புசாமிப் பிள்ளையின் மனைவிகூடப்பொய்யோ?” என்றாள்.

இதைக்கேட்ட அச்சுதன் பின்னும் பெரிய இடி விழுந்தவனாகி “என்ன ? லாயர் தம்புசாமிப் பிள்ளையின் மனைவியா ?” என்றான்.

நீலாட்சி:—“ஆம். சந்தேகமென்ன ! அந்தம்மாளுக்குத்தான் இப்போது நாம் கடிதம் எழுதியது. உன் வேலைக்காரன் இதுவரையில் அதைத் தபாலில் போட்டுவிட் டிருப்பான்” என்றாள்.

இதைக் கேட்டதே அச்சுதன் பெருந் திகிலடைந்து “ஓ ! இது மிக்க அக்கிரமமான பெருமோசம். அப்படி

யாயின்அந்தத் திருட்டுப்பயல், என் வேலைக்காரன், உனக்கு உளவாக இருந்திருக்க வேண்டும்" என்றான்.

நீலாட்சி:—உளவென்று கூறுகிறாய்? அவன் சில விஷயங் களில் எனக்கு உதவிசெய்தது உண்மையே? ஏன் அதை மறைக்கவேண்டும்.

அச்சுதன்:—ஆ! எனக்கு இப்போது தோன்றுகிறது. அந்த விஷயம், சுகவிலாசத்தில் நடந்த அதிசயநாட கம் - நீ யங்கு தற்செயலாக வந்தது பொய்யாகவே யிருக்க வேண்டும். நான் அங்குவருவது உனக்கு முன்னடியே அறிவிக்கப்பட் டிருந்தது. அதனால் தான் நீ இரண்டு துப்பாக்கிகளை வைத்துக்கொண்டு ஆயத்தமாக விருந்தாய். அவையாவும் முன்னடியே செய்யப்பட்ட சதியாலோசனை. அதன்பயனேஇது.

நீலாட்சி:—"நடந்த சங்கதியைப்பற்றி இப்போது விவர மாகப்பேசுவதில் பயனில்லை, இப்போது நடக்க வேண்டிய விஷயத்தைப்பற்றிப் பேசுவோம். உன் வேலைக்காரன் எனக்கு உளவாயிருந்து சில விஷயங் களில் உதவிசெய்தா னென்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் எஜமானுக்குத் துரோகம் செய்து பணத்திற்காக எனக்கு உதவிசெய்த அவனை நான் விரும்பவில்லை. யாரேனும் கொஞ்சம் அதிக பணம் கொடுத்தால் அவன் எனக்கும் துரோகம் செய்வானே. இப்போது நாமிருவரும் ஒருமித்து வாழ்வதாயின் நான் அவனுக்குத் தக்க பரிசளித்து, ஒரு நற்சாட்சிப் பத்திரமும் கொடுத்து அனுப்பி விடுவேன். நாம் அப்படி வாழக்கூடாததாயின் உன் வரையில் நீ அவனை வைத்துக்கொண்டால் வைத்துக் கொள், நீக்கிவிட்டால் நீக்கிவிடு. என்வரையில் நான்

அவனுக்குந் தக்க பரிசளித்து விடுவேன், அவ்வள வே" என்றாள்.

அச்சுதன் சிந்திக்கலானான். "ஒரு சமயம் இவள் செய்கையே செயமடைவதாயின் நாம் இவளை விரோதம் செய்து கொள்வதில் பயனில்லை. அதனால் பார்ப்பவர்களுக்கு கேலியாகிவிடும். நமது நண்பர்கள் கூட நாம் இப்பெண்ணால் ஏமாற்றப் பட்டோம் என்று கருதி நம்மைக் கேலிசெய்வார்கள். அப்படிக்கின்றி நாமே பிரியப்பட்டு இவளை மணம்புரிந்து கொண்டதாக நடித்தால் அது ஒரு வேடிக்கையாகவும், நாம் காதலித்த கன்னிகையைச் சாமார்த்தியமாக மணம்புரிந்து கொண்டதாகவும் கருதப்படும். ஆயினும் முன்னே இவள் செய்திருக்கும் இத்தந்திரமான சூதால் நாம் இவளை மனைவியாக ஏற்றுக் கொள்ளும்படி. பத்தப்படுத்தப்பட் டிருக்கிறோமா? இவள் செய்கைகளும் நடந்த சம்பவங்களும் நம்மை யெவ்வளவுதூரம் பாதிக்கும் என்பதைத் திட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்" என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டான்.

அதன்மேல் அச்சுதன் நீலாட்சியை நோக்கி "நீலாட்சி! நான் ஒருமணிநேரம் வெளியில் போய் வரவேண்டும். உண்மையைக் கூறுகிறேன். உன் தந்திரத்தால் நான் எவ்வளவு தூரம் பத்தப்படுத்தப்பட லாகும் என்ற உண்மையை யறிந்துவரவே போகிறேன்.

நீலாட்சி.—"செய் - நான் அதைத்தடுக்கவில்லை. ஆனால் ஒன்று. நீ அப்படியே போய் விட்டாலோ, நான் உடனே இந்திரபுரிக்குத் திரும்பிவந்து நேராய் உங்கள் வீட்டிற்கு வருவேன்" என்றாள்.

அச்சுதன்:—"இல்லை, நான் அப்படியொருபோதும்போய் விடேன். நான் விசாரிக்கப்போகும் சங்கதி எப்படி

முடிந்தாலும் நான் நேராய் இங்குவருவேன். எப்படியாயினும் நமக்குள் ஒரு ஒழுங்கு ஏற்படவேண்டும்" என்று பதிலுரைத்து விட்டுச் சென்றான்.

அச்சுதன் செல்லும்போது வெளிவாயிற்படி யருகில் கண்ணுசாமி நின்றிருப்பதைக் கண்டான். ஆனால் இச்சமயம் இவனிடம் பேசலாகாதென்று சென்றான். அவன் வெளிச் சென்றதே கண்ணுசாமி நீலாட்சியிடம் வந்தான். வந்ததும் அவளை நோக்கி "அம்மா! தங்கள் விவகாரம் திருப்திகரமாக நிறைவேறியதா? எப்படியும் இன்று எல்லா சங்கதிகளும் வெளிப்பட்டு விடவேண்டுமென்று தெரியும்" என்றான்.

நீலாட்சி:—"ஆ. எல்லாம் திருப்தியாகவே நடைபெறுகிறது. இன்னும் ஒருமணி நேரத்தில் நான் கனம் அச்சுதன் மனைவியாக அங்கீகரிக்கப் படுவேன் என்றே நம்புகிறேன். அது எப்படி முடிந்தாலும் நீ எனக்கு உண்மையோடு உதவிசெய்தாய் - இந்தா இப்பையைப் பரிசாக எடுத்துக்கொள்" என்று சவரன்கள்நிறைந்த ஒருபையை யவனிடமளித்தாள்.

பையிலிருந்த நூறு சவரன்களைக் கண்ட கண்ணுசாமி மிக்க சந்தோஷ மடைந்து நன்றியோடு அவளுக்கு வந்தன மளித்துவிட்டு "அம்மா! நாம் மிக்க தந்திரமாக வேலையை முடித்து விட்டோம். ஒயினில் கலந்தமருந்து சரியாக வேலைசெய்தது" என்றான். நீலாட்சி "எல்லாம் அதினால் தான் நிறைவேற வேண்டுமென்று நான் முன்னமே கூறினேனல்லவா!" என்றாள்.

அச்சுதன்:—அதோடு நாம் இரண்டு சந்திப்பு ஸ்டேஷன்களில் அவரை ஒரு வண்டித் தொடரிலிருந்து மற்றொருவண்டித் தொடருக்கு மாற்றியது மிக்க

சாமர்த்தியம்'' என்ருன். கடைசியில் அவன் விடைபெற்றுக்கொண்டு வெளியில்சென்று நின்ருன்.

நீலாட்சியின் மனதில் பூரண சந்தோஷ முண்டாயிற்று. இப்போது அவள் கௌரவமாக ஒருவன் மனைவியாகிவிட்டாள். ஆனல் தன்சந்தோஷத்தை வெளிக்குக் காட்டாமல் அடக்கத்தோடேயே யிருந்தாள்.

ஒரு மணிநேரங் கழித்து அச்சுதன் வந்தான். அவன் முகக்குறியால் அவன் ஒருவித தீர்மானத் தோடேயே வந்திருக்கிருனென்று தெரிந்தது. அவன்வந்து உட்கார்ந்ததும் "நீலாட்சி! உன்னை என் மனைவியாக ஏற்றுக் கொள்கிறேன். நீ ஆழ்ந்த யோசனையோடு செய்த தந்திரம் பலித்தேபோயிற்று'' என்ருன்.

இவன் இவ்வாறு வந்து கூறுவானென்றே நீலாட்சி எதிர் பார்த்திருந்தாள். ஆகையால் பொறுமையாகவே "நீ கடைசியில் இவ்வாறு பதிலளிப்பா யென்று நான் அறிவேன்'' என்ருள். சற்றுநேரம் இருவரும் ஒன்றும் பேசாமல் மௌனமாக விருந்தார்கள்.

பிறகு அச்சுதன் நீலாட்சியை நோக்கி "ஆரூரில் உன் அத்தை யிருப்பது போலத்தான் உனக்கு முப்பதினுயிரம் பவுன் ஆஸ்தி கிடைப்பதும் என்று நினைக்கிறேன். நான் ஒரு முழுமூடன். அதைப்பற்றி கேட்பானேன்?'' என்ருன்.

நீலாட்சி:—"ஏன் எனக்கு முப்பதினுயிரம் பவுன்கிடைப்பது உண்மையாகவே யிருந்தாலோ? ஒரு சமையம் உண்மையே யென்று எண்ணிக்கொள்வோம். இருந்தால் அதனுலென்ன?'' என்று பேச்சு முறைமைக்குக் கேட்பவள்போல கேட்டாள்.

அச்சுதன்:—அதைப்பற்றிப் பேசுவதில் என்ன பிரயோசனம். ஒருபயனுமில்லை.

நீலாட்சி:—இருக்கட்டும். அது உண்மையாகவே யிருக்க லாகாதோ, அப்படியே யிருந்தாலோ?

அச்சுதன்:—ஓ! அதைப் பற்றிப்பேசுவதில் பயனென்ன? உன்னிடம் ஒருகாசுகூட இல்லை. நீ பூரணமாக எல்லா விஷயத்திலும் உன் பெரியதந்தையின் ஆதாரணைக் கீழிருக்கிறாய் என்று நான் அறிவேன். அப்படி யுனக்கு முப்பதினாயிரம் பவுன் கிடைப்பது உண்மையாயின் உன்னை மணம் புரிந்து கொண்டதற்கு நான் தக்ககாரணம் கூறக்கூடும். அப்போது என்னை யொருவரும் முட்டாளாகக் கருதார்கள்.

நீலாட்சி:—"சரி நாம் இந்திரபுரி போய்ச் சேர்ந்த இருபத்திநான்கு மணி நேரத்திற்குள் எனக்கு அத்தொகை கிடைக்குமென்பதற்குத் தக்க அத்தாட்சி காட்டினாலோ" என்றாள்.

இம்மொழிகளைக் கேட்டதே அச்சுதன் மிக்க வியப்போடு அவள் முகத்தை யுற்று நோக்கினான். அவள் முகத்தில் ஒருவித நம்பகமும் உறுதியுமான குறியிருந்தது. அச்சுதன் "நீலாட்சி! நீகூறுவது உண்மையா?" என்றான்.

நீலாட்சி:—நீ கூடியவரையில் என்குணங்களை யிறுகாறும் சரியாக உணர்ந்துகொண் டிருக்கவேண்டும். இப்போது உன் விஷயத்தில் நான் ஆழ்ந்த சிந்தனையோடு சூதும் தந்திரமுமாகவே நடந்துகொண்டேன் என்பது உண்மையே. ஆனால் நீ ஆதிமுதல் என்னை வஞ்சித்துமோசம் செய்யக்கருதி யிருந்தாயல்லவா! அதற்காக நான் அப்படிச் செய்யவேண்டியிருந்தது. இப்போது இந்தத் தொகை யெனக்குக் கிடைக்குமென்று நான் பொய்கூறுவதால் இன்னும் இரண்டு மூன்று நாட்களுக்கு நீ கொஞ்சம் சலகரணை

யாகவிருக்கப்போகிறாய். பிறகு இது பொய்யென்று தெரிந்து விட்டால் அதுமுதல் என்மேல் பூரண வெறுப்படையப் போகிறாய். அப்படியிருக்க நான் இவ்விஷயத்தில் பொய்யேன் கூறவேண்டும். அப்படிக் கூறமாட்டேன்.

அச்சுதன்:—ஆ! அதுமட்டும் உண்மையாயின் நான் எவ்வளவோ நிம்மதியாகவும் மனோதிடத்தோடும் இருப்பேன். என் தாய் தந்தையருக்குக்கூட உன்னை யொரு தடையுமின்றி மருமகளாக ஏற்றுக்கொள்ளத்தக்க காரணம் உண்டாய்விடும்.

நீலாட்சி:—"இப்போது நான் முடிவாய்க் கூறுகிறேன். நான் கட்டாயம் முப்பதினாயிரம் பவுன் சீதனம் கொண்டு வருவேன். அது தவறினால் நான் உன் முகத்தையே பார்ப்பதில்லை, இந்த நாட்டிலேயே யிருப்பதுமில்லை. ஏதேனுமொரு அன்னிய நாட்டிற்குப் போய்விடுவேன். இது சத்தியம், முக்காலும் சத்தியம்" என்றாள்.

அச்சுதனுக்கு இப்போது அவள் கூறுவது உண்மையென்றுபட்டது. "ஆ அப்படியாயின் நான் எவ்வளவோ மன நிம்மதியோ டிருப்பேன்" என்றான்.

---

## 36-வது அத்தியாயம்.

### கொலைக்குற்ற விசாரணை.

முன் அத்தியாயத்தில் கூறிய சம்பவங்கள் நடந்து இரண்டு நாட்களாயின. மூன்றாவது நாள் இந்திரபுரி நகர நீதிச்சபை யிருக்கும் வீதியில் காலையே பெருங்கூட்டம் கூடி யிருக்கிறது. ஏனெனில், அன்று தான் நமது உண்ணாமுலைமேல் சுமத்தப்பட்ட கொலைக்

குற்றம் விசாரிக்கப் படுகிறது. நீதிச்சபையின் முன் ஜனக்கூட்டம் மிக்க அதிகம். கொலை நடந்து உண்ணுமுலை சிறை செய்யப்பட்டு ஒரு மாதமாயிற்று. இந்த ஒரு மாதமாக உண்ணுமுலை சிறையிலேயே யிருக்கிறாள். அவளுக்கு இப்போது தேக சுகமில்லை. அவள் பாட்டனாகிய பராங்குசம் பிள்ளையும் சிறைச்சாலையில் மனோவியாதியால் அசௌக்கிய மடைந்திருக்கிறார்.

அக்குற்றச் சாட்டைப் பற்றி முன் வெளிவந்த சங்கதிகளுக் கதிகமாக வேறொன்றும் வெளிவரவில்லை. உண்ணுமுலை லாயர் வரதப்பிள்ளையிடம் இரகசியமாகக் கூறிய சங்கதிகள் ஒருவர்க்கும் தெரியாது. ஆகையால் அனேகர் இவள் கொலை செய்திருப்பாளென்றே கருதினார்கள். ஆயினும் சிலர் இவள் நிரபராதியே யென்று கூறிக்கொண் டிருந்தார்கள். அதிலும் சுந்தரம்மாள் உண்ணுமுலை நிரபராதியே யென்று பலர்க்கும் உறுதியாகக் கூறிக்கொண் டிருந்தாள்.

விசாரணை இரண்டு மூன்று நாட்களிருக்கையில் உண்ணுமுலையின் தேகம் பூரணசுகமடைந்து அவள் மனதிற்கும் திடமுண்டாய் விட்டது. விசாரணையினன்று காலை பத்து மணிக்கெல்லாம் நியாயாதிபதிகள், லாயர்கள், பாரிஸ்டர்கள், ஜூரர்கள் முதலிய அனைவோரும் வந்து தத்தம் ஆசனங்களி லமர்ந்தார்கள். உண்ணுமுலையும் குற்றவாளியின் கூண்டில் கொண்டுவந்து நிறுத்தப் பட்டாள். முதலில் சபையிலுள்ள அனைவரும் தன்னை நோக்குகிறார்கள் என்ற உணர்ச்சியால் மனக்கலக்க மடைந்தாள். அச்சமயம் அவளையங்கு அழைத்து வந்து நிறுத்திய சிறைச்சாலைக் காவலன் அவள் காதருகில் குனிந்து "அம்மா நீ இப்போது உன் நிரபராதத் தன்மையை நிரூபிக்கத் தைரியத்தோடு இருக்கவேண்டும்."

என்றான். உடனே அவள் புத்தி நிதானத்திற்கு வந்து விட்டது. தைரிய முண்டாய் விட்டது.

பிரதம நியாயாதிபதி விசாரணையைத் தொடங்கி விட்டார். உடனே துரைத்தன வக்கீல் குற்றத்தை ருசுப் படுத்தத் தொடங்கினர். பாரிஸ்டர் வரதப்பிள்ளை குறிப் பெடுத்துக்கொள்ள ஆயத்தமானர். அச்சமயம் ஒரு மனிதன் அங்கு வந்து வரதப்பிள்ளையின் பின்னால் உட் கார்ந்திருந்த லாயர் தம்புசாமிப் பிள்ளையை நோக்கித் தங்களுக்கு ஒரு சீட்டு கொண்டு வந்தேன் என்று கூறி ஒரு சிறு கடிதத்தை யளித்தான். அதை வாசித்துப் பார்த்ததும் தம்புசாமிப் பிள்ளையின் முகத்தில் ஒருவிதப் பிரகாசம் உண்டாயிற்று. அவன் "இதோ வருகிறேன்" என்று கூறிவிட்டு உடனே அந்த ஆள்கூடவே சென்றான்.

வந்த ஆள் ஒரு ஹோட்டல் வேலைக்காரன். அவன் தம்புசாமிப் பிள்ளையை அந்த ஹோட்டலுக் கழைத்துச் சென்று மேல் மாடியிலுள்ள ஒரு அறையில் கொண்டு போய் விட்டான். அந்த அறையில் நமது நீலாட்சி தனியே யுட்கார்ந்திருந்தாள். அவள் லாயரைக் கண்ட தும் எழுந்து மிக்க அன்போடு "அண்ணா! தங்களைக் காண மிக்க சந்தோஷமடைகிறேன்" என்றாள். லாயரும் "குழந்தாய்! உன்னைக் காண்பது எனக்கு அதிக சந் தோஷமே. ஆனல் நான் ஒரு பணக்காரக் கட்சிக்காரனை யிழந்து விட நேர்ந்தது" என்றான்.

நீலாட்சி திடுக்கிட்டு என்ன சங்கதியென்று கேட்ட தற்கு லாயர் "உன் கணவன் தந்தையாகிய உலகேசம் பிரபு நெடுநாளாய் என்னுடைய கட்சிக்காரனாக இருந்து வருகிறார். அப்போதைக்கப்போது அவரால் நல்ல வரு மானம் வரும். இப்போது அவர் நான் உளவாகவிருந்தே தன் புத்திரன் உன்னை மணம் செய்யும்படி செய்ததாகவே

கருதுகிறார். கிடக்கட்டும் அதைப் பற்றி யவசியமில்லை. நீ நல்ல க்ஷேம நிலைமை யடைந்தாய். ஒரு பிரபுவின் புத்திரன், பின்னால் பிரபுபட்டம் பெறப் போகிறவனை மணம் புரிந்து கொண்டாய். உன்னால் நமது குடும்பத்திற்கு பிரபுவம்ச சம்பந்தம் கிடைத்ததோடு கௌரவமும் பெருமையும் உண்டாயிற்று. நீங்கள் எப்போது வந்தீர்கள்?" என்றான்.

நீலாட்சி "இரவு நெடுநேரங்கழித்து வந்தோம். ஆதலின் அக்காலத்தில் உங்களுக்குத் தொந்திரை யளிக்கலாகாதென்று ஹோட்டலில் தங்கினோம்" என்றாள். நீலாட்சி "நான் தங்களை முதலில் தனியாய்க்காண வேண்டுமெனக் கருதி என் கணவனைச் சில சாமான்கள் வாங்கி வரும்படிக் கடைவீதிக்கனுப்பினேன். அவர் வர இன்னும் ஒரு மணி நேரம் செல்லும்" என்றாள்.

லாயர்:—நான் நியாயச் சபையில் இருப்பது உனக்கெப்படித் தெரியும்?

நீலாட்சி:—வீட்டிற்கு ஆளை யனுப்பினேன். அவன் திரும்பி வந்து தாங்கள் உண்ணுமுலை என்ற பெண்ணைப் பற்றிய விசாரணையைக் கவனிப்பதற்காக நியாயச் சபைக்குச் சென்றிருப்பதாய்க் கூறினான். அதன் பின் அவ்விடத்திற் கனுப்பினேன். ஏன் அண்ணா அதைப்பற்றி என்ன கருதுகிறீர்கள். அவள் தண்டிக்கப் படுவாளா? தப்பித்துக் கொள்வாளா?

லாயர்:—அவளுக்கு விரோதமாக விருக்கும் சாக்ஷியர்களை நோக்கும்போது வேறென்ன அபிப்பிராயங் கொள்வது? ஆனால் அது விஷயமாக ஒரு சம்பவம் நேர்ந்திருக்கிறது. அதுதான் எனக்குப் பெரிய

வியப்பாக விருக்கிறது. அது எப்படி நேர்ந்த தென்று எனக்குச் சற்றும் விளங்கவில்லை.

நீலாட்சி ஆவலோடும் கொஞ்சம் கலவரத்தோடும் அதென்ன சம்பவம்? என்ருள். லாயர் "அங்கு வருவதற்கு எவ்வித சம்பந்தமு மில்லாத ஒரு ஆள் ஐரோர்கள் கூட்டத்தில் வந்து நுழைந்துகொண் டிருக்கிருன். அவன் அங்குவரக் காரணமேயில்லை. எப்படி வந்தானென்று அறியக் கூடவுமில்லை.

நீலாட்சி :—அவன் அவளுக்கு அனுகூலம் செய்யக் கருதுபவனு பிரதி கூலம் செய்ய நினைப்பவனு?

லாயர் :—அவன் அனுகூலம் செய்ய நினைப்பான் என்று கருத ஒரு காரணமுமில்லை. கெடுதியே செய்ய வேண்டியவன். அப்படி யிருந்தும் அவன் அவளுக்கு நன்மையே கருதுகிருன் என்று இரண்டொருவர் கூறக்கேட்டேன்.

நீலாட்சி:—இருக்கட்டும் தங்களுக்கு அவசரமாய்ச் செல்ல வேண்டிய வேலை யிருக்கிறது. நான் தங்களிடம் பேச வேண்டிய விஷயத்தை யென் கணவன் வருமுன்பே பேசிவிட வேண்டும்.

லாயர் :—ஆம் சீக்கிரம் கூறு.

நீலாட்சி :—நான் கேட்கும் இரண்டொரு விஷயங்களுக்கு முன்னே விடை யளித்துவிட்டால் நான் கூறும் விஷயத்திற்கு அனுகூலமாக விருக்கும்.

லாயர்:—கூறு சீக்கிரம்.

நீலாட்சி:—முதலாவது, தங்களுக்கு அதிக சுற்றத்தாரில்லை. ஆகையால் என்னைத் தங்கள் நெருங்கிய சுற்றத்தாளாகக் கருதி யிருக்கிறீர்களல்லவா?

லாயர்:—ஆம் சந்தேகமென்ன. நீ என் தம்பியின் புத்திரி.

நீ எல்லாரை விட எனக்கு நெருங்கிய பாத்திய முடையவள்.

நீலாட்சி:—அப்படி யிருப்பதால் என்னையே தங்களுக்குப் பின் தங்கள் வாரிசாகக் கருதுகிறீர்களல்லவா?

இதைக்கேட்டதே லாயர் திடுக்கிட்டு "இதென்ன கேள்வி? இக்கேள்விகூட கேட்கத்தகுந்ததா? உனக்குத் தெரியாதோ..." என்றார்.

நீலாட்சி "எனக்கொன்றும் தெரியாது. நான் கேட்கும் கேள்விக்கு விடைவேண்டு மென்பதே யெனக்குத் தெரியும். சரி இதற்கு விடையளிக்கப்பட்டதாகவே கருதிக்கொள்கிறேன். இப்போது என்னைத் தங்கள் வாரிசாகக்கருதி யிருக்கிறீர்கள். அப்படி யிருக்கத் தாங்கள் தங்கள் மரண சாசனத்தில் எனக்காக எழுதி வைக்கப் போகும் திரண்ட செல்வத்தில் ஓர் பாகத்தை யிப்போதே யென்னிடம் ஒப்பித்தாலென்ன?" என்றாள்.

இதைக்கேட்டதே லாயர் கோபத்தோடு சட்டென் றெழுந்து "நீ இதைப்பற்றிப் பேசுவதற்காகவே என்னை வரவழைத்ததாயின் எனக்கு இவ்விஷயமாகச் சம்பாஷிக்கப்பிரியமில்லை" என்று திரும்பப்போனார்.

நீலாட்சி "இரும் இரும்; ஒருவார்த்தை. இப்போது நான் கூறக் கருதியிருக்கும் விஷயம் எவ்வளவு தூரம் தங்கள் நன்மையைப் பொருந்திய தென்பது தங்களுக்குத் தெரியவில்லை" என்று சாந்தமாகவே ஏதோ விசேஷ சங்கதி யுடையவள் போல் கூறினாள்.

அவள் மொழிகளைக்கேட்ட லாயர் திடுக்கிட்டுக் கலக்கமடைந்து, என்ன சங்கதி நீ கூறப்போவது என்று அவளை யுற்றுநோக்கினார். நீலாட்சி "இப்போது நான் ஒரு பிரபுவின் புத்திரனை மணம் புரிந்து கொண்டதால் உமது குடும்பத்திற்குக் கௌரவம் உண்டாகியதல்லவா.

உமது தம்பி புத்திரியைப் பற்றி நீர் பெருமையாய்க் கூறிக் கொள்ளலாமல்லவா? இன்னும் கொஞ்சநாள் சென்று சீமாட்டியாகவே ஆகிவிடும்போது உமக்கு எவ்வளவு கௌரவம்!...'' என்றபோது,

லாயர்:—ஆம். இதனுல் என்ன?

நீலாட்சி:—"இம்மாதிரி உமக்கு இவ்வளவு கௌரவம் வரும்போது என்னைச் சீதனமில்லாமல் கலியாணம் செய்து கொள்ளும்படி விடலாமா. அண்ணு! ஒரு பொறுப்பை நானே ஏற்றுக்கொண்டேன். அதாவது நான் முப்பதினுயிரம் பவுன் சீதனம் கொண்டு வருவேன் என்று என் கணவனுக்கு வாக்களித்து விட்டேன்.'' என்ருள்.

இதைக்கேட்ட லாயர் பிரமித்து "இதென்ன? உனக்குப் பையத்தியமா?'' என்ருர். நீலாட்சி "நான் இவ்வளவு தெளிவான புத்தியோடு ஒருபோதும் இருந்ததில்லை'' என்ருள். லாயர் "என்ன? முப்பதினுயிரம் பவுன்? இது வெட்கக்கேடு'' என்ருர்.

நீலாட்சி.—"இப்போது நான் கேட்பது ஈடுக்கீடே. இதோ இக்கடிதம் முப்பதினுயிரம் பவுன் பெறுமா பாரும்!'' என்று கூறிக்கொண்டே தன் உள் ஜேபியிலிருந்து ஒரு கடிதத்தை யெடுத்து அவர் கண்களுக்கு முன் காட்டினுள்.

தம்புசாமிப்பிள்ளை அக்கடிதத்தைக் கண்டதே அது இன்னதென்று தெரிந்து கொண்டார். உடனே அவர் முகம் சவம்போல் வெளுத்து விட்டது. ஆவிசோர்ந்து விட்டது. அவர் மனதில் பேரிடி விழுந்ததுபோலாயிற்று. நீலாட்சி அவ்வளவு தைரியத்தோடும் நம்பகத்தோடும் முப்பதினுயிரம் பவுன் தன்னைக்கேட்ட துணிகரத்திற்குக் காரணம் இன்னதென்று இப்போது அவருக்கு விளங்

கியது. அவர் பிரமையோடும் மிரட்சியோடும் அவளை நோக்கியபடி யிருந்தார்.

நீலாட்சி:—"நான் கேட்கும் தொகை உடனே அல்லது நாளைக்கு எனக்கு அளிக்கப்படும் என்று ஒரு சீட்டு எழுதிக்கொடுத்து விட்டால் இக்கடிதத்தை யுடனே தங்களிடம் அளித்து விடுகிறேன். தாங்கள் இதை யழித்து விடலாம்" என்றாள்.

லாயர்:—இது எப்படி யுன்னிடம் வந்தது?

நீலாட்சி:—எப்படி வந்ததோ அதைப்பற்றித் தங்களுக்கு அவசியமில்லை. இக்கடிதம் அழிக்கப்பட்டால் இதி லடங்கிய இரகசியம் நம்மிருவர் தவிர வேறொரு வர்க்கும் தெரியாது.

லாயர்:—உண்மைதானா! இதில் அடங்கிய சங்கதி வேறு யாருக்கும் தெரியாதே! உன் கணவனுக்கு...?

நீலாட்சி:—இல்லை யில்லை. என் கணவன் மனப்பிரியத் தால் என்னை மணம் புரிந்து கொண்டான் என்று நினைக்கிறீர். அதற்காக எவ்வளவோ அந்தரங்கவேலை கள் செய்யவேண்டி யிருந்தது. நான் எதற்காக என் பெரிய தாயாகிய தங்கள் மனைவியிடம் இரகசியமாக இருநூறு பவுன் கடனாகவாங்கினேன்? இதுகாறும் தாங்கள் அதை யுணர்ந்திருக்கலாம். நான் சாதாரண ஸ்திரீயல்ல. என்னிடம் துணிகரமும், வைராக்கிய மும், ஊக்கமும், ஆழ்ந்த யோசனையுமுண்டு. என் க்ஷேம நிலைமையை நான் சம்பாதித்துக்கொள்ளத் துணிந்திருக்கிறேன். என் குடும்பத்தைச் சேர்ந்த அகௌரவம் என் கணவனிடம் சிக்கும்படி ஒரு போதும் விடமாட்டேன்.

லாயர்:—இப்போதுதான் நான் உன்னைப் பூரணமா

யறிந்துகொண்டேன். ஆயினும் நீ கேட்கும் தொகை மிக்க அதிகம்.

நீலாட்சி:—முப்பதினுயிரம் பவுனில் ஒன்றுகூடக் குறைய லாகாது. நான் என் கணவனிடம் அப்படி வாக் களித்துவிட்டேன்.

லாயர்:—குழந்தாய்! நீ நன்ருய் யோசித்துப்பார். அது எவ்வளவு பெருந்தொகை. நீ என்னைக் கஷ்டப் படுத்தி வாங்கலாமா? நான் எவ்வளவு பட்சத்தோடு உன்னை யாதரிக்கச் சம்மதித்தேன்.

நீலாட்சி:—அது சரிதான், நான் பதிலுக்குச் செய்யும் உதவி எத்தகையது?

லாயர்:—ஆம் ஆம். இது பெரிய உதவியே. நீ யொரு போதும் இதை யுன் கணவனுக்காவது, உன் பெரியதாயாருக்காவது கூறமாட்டாயே?

நீலாட்சி:-"ஒருபோதும் கூறமாட்டேன். நீர் உமது குணத் தைச் சிந்தித்துப்பார்த்தால் சுலபமாக என் குணத்தை யறிந்து கொள்ளலாம். என் க்ஷேமமே யெனக்கு யாவற்றினும் பிரதானம். அதற்கு அனு கூலமானகாரியம் எதுவாயினும் செய்தே தீருவேன். அதற்காக பெரியகுற்றம் செய்யவேண்டியதாயினும் சரி, நான் அகப்படாமலிருக்க வழியிருந்தால் அக்குற்றத்தைச் செய்யத் துணிந்து விடுவேன். இப்போது உமக்கு என்மேல் எத்தகைய அன் பிருக்கிறதோ அத்தகைய அன்பே உம்மேலும் என் பெரிய தாயார்மேலும் எனக்கிருக்கிறது. நீங்கள் சுயநலங் கருதாமல் எனக்கு உதவி செய்யவில்லை. என்னை யுங்கள் வீட்டில் வைத்திருந்தால் செல்வப் பிரபுக்களும் அவர்கள் புத்திரர்களும் உங்கள் மனைக்கு வருவதற்கு நான் ஒரு வசியமருந்து

போலாவேன். பிறகு நான் யாரேனும் ஒரு செல்வச்சீமான் புத்திரனை மணம் புரிந்துகொண்டால் அதனல் உங்களுக்கு மிக்க கௌரவமுண்டாகும். பிரபுக்கள் வமிசத்தில் சம்பந்தம் ஏற்பட்டால் அனேகம் பிரபுக்கள் உங்களையே வக்கீலாக அமர்த்திக்கொள்வார்கள். அதனல் உங்களுக்கு மிக்க செல்வம் கிடைக்கும். பார்த்தீர்களா. நானும் என் சுய நன்மையைக் கருதியே இங்கு வந்தேன். இப்போது பார்த்தீர்களா உங்களை நான் சரியாக அறிந்துகொண்டேன். நீங்களும் என்னை யறிந்துகொண்டீர்கள்.'' என்ருள்.

லாயர்:—ஆம் ஆம். நீ கூறுவது உண்மையே. நீ கேட்கிறபடி முப்பதினுயிரம் பவுன் கொடுத்து விடுகிறேன்.

நீலாட்சி:—எழுதிக் கொடுங்கள்.

லாயர் உடனே அவள் கோரியபடி முப்பதினுயிரம் பவுன் கொடுப்பதாக எழுதிக்கொடுத்தார். நீலாட்சியதை வாசித்துப் பார்த்துக்கொண்டு “ சரி இனித் தாங்கள் ஆலசியமின்றி செல்லலாம்.'' என்ருள். லாயர் இந்த இரகசியத்தை யொருவரிடமும் கூறவொட்டாதபடி வாக்குத்தத்தம் பெற்றுக்கொண்டு அவளிடமிருந்த கடிதத்தை வாங்கி அங்கிருந்த ரெகிடித்தீயில் போட்டு எரித்துவிட்டு எழுந்து சென்ருர். இனி நாம் நீதிச்சபையில் நடக்கும் விஷயத்தைக் கவனிப்போம்.

துரைத்தன வக்கீல் குற்றத்தைப்பற்றிப் பேச ஆயத்தமானர். உண்ணுமுலையின் செவியில் சிறைச்சாலைக் காவலன் எச்சரிக்கை வார்த்தைகளைக் கூறியதே அவள் தைரியமடைந்தாள் என்று கூறினேமல்லவா. அச்சமயம்

சபையை ஏறெடுத்து நோக்கியபோது அவள் மனதில் "ஆ! இன்று நமது உயிர் சுவரின்மேலிருக்கும் பூனைபோ லிருக்கிறது. ஜூரர்களாகிய பன்னிருவர் அபிப்பிராயத் தில் நம் ஜீவியமும் மரணமும் சிக்கிக்கொண்டிருக்கிறது" என்று தோன்றியது. உடனே ஜூரர்களிருக்குமிடத்தை நோக்கினாள். அங்கு முதல் ஆசனத்தில் ஜூரர்களின் தலைவன் அமர்ந்திருக்கிறான். அவன் முகக்குறியால் அவன் கன்மனமும் நிர்த்தாக்ஷணியமான குணமுமுடையவ னென்று தோன்றியது. உண்ணாமுலையின் மனம் வாட்ட மடைந்தது. ஒவ்வொருவராக மற்ற ஜூரர்களையும் நோக்கினாள். வரிசையாகப் பார்த்துக்கொண்டே போன போது ஒரு ஆளைக்கண்டதே திடுக்கிட்டாள். உற்று நோக்கினாள். அவன் முகம் தனக்கு அறிமுகமான முகம் போலவே யிருந்தது. அவள் மிக்க வியப்படைந்து கண் களைத் துடைத்துக்கொண்டு பார்த்தாள். ஆம் அவனே. நாற்பது வயதுடைய ஒரு ஆடவன் கிழவி கொல்லப் பட்ட தினம் உண்ணாமுலை ஞானம்பாள் வீட்டிலிருந்து புறப்பட்டபோது கொலை நடந்த சந்தில் அவளைச் சந் தித்துப் பேசினானென்று கூறினேமல்லவா! அதே மனி தனையே இப்போது ஜூரர்கள் கூட்டத்தில் கண்டாள். அவன் அப்போது ஒரு செல்வப் பிரபு மகன்போல் கம் பீரமான உடையணிந்திருந்தான். அவனை யங்கு கண் டதே உண்ணாமுலையின் மனதில் ஒருவித உற்சாகம் உண்டாயிற்று. ஏனெனில் அவன் தனக்கு ஒருபோதும் விரோதம் செய்யமாட்டானென்று அவள் அறிவாள். ஆகையால் அவன் அங்கு வந்திருப்பது தனக்கு உதவி செய்யவே என்று அவளுக்கு நன்ருய்ப் புலப்பட்டது. உடனே அவளுக்குத் தைரியமுண்டாயிற்று. பாரிஸ்டர் வரதப்பிள்ளை அவள் அப்போதுதான் தன் நண்பன்

அங்கு வந்திருப்பதைக் கண்டாள் என்று தெரிந்து கொண்டு குறிப்பாக அவளை நோக்கினார்.

விசாரணை தொடங்கிவிட்டது. துரைத்தன லாயர் குற்றச்சாட்டைப்பற்றி சுருக்கமாகக் கூறியபின் சாக்ஷிகள் விசாரிக்கப்பட்டார்கள். முதல் நியாயஸ்தலத்தில் விசாரிக்கப்பட்ட போலீஸ்காரர், நமது தேவராஜப் பிள்ளை, மோடார் வண்டி யோட்டுபவன், உண்ணாமுலை வசிக்கும் வீட்டுக்காரியாகிய சுந்தரம்மாள், டாக்டர் முதலிய அனைவரும் கிரமமாக விசாரிக்கப்பட்டார்கள். அவர்களனைவரும் முன்பு கூறியவற்றையே யிப்போதும் கூறினார்கள். அவற்றை நாம் மறுபடி இவண் வரைவது அனாவசியமாகும்.

சாக்ஷிகளனைவரும் விசாரிக்கப்பட்ட பின்னர் துரைத்தன லாயர் எழுந்து சந்தர்ப்ப சாட்சியங்களை யொவ்வொன்றாகக் கூறி, "முக்கியமாக, உண்ணாமுலை தனியாக அக்கிழவியிடம் சண்டை யிட்டுக்கொண் டிருந்தது, அப்போது அவள் எனக்கு இப்போது ஒரு புலியின் ஆத்திரம் உண்டாயிருக்கிறதென்று கூறியது, அதுவே அக்கிழவி கடைசிதரமாக உயிரோடு காணப்பட்டதென்பது, கிழவியிடமிருந்த மோதிரம் குற்றவாளியிடமிருந்து அகப்பட்டது, அம்மோதிரத்தைப் போலீஸ்காரர் எடுத்தபோது குற்றவாளி 'ஆ! இம்மோதிரத்தால் நான் எத்தகைய மனோவேதனை யடைந்தேன் என்பது உங்களுக்குத் தெரியாது' என்று கூறியது, டாக்டர் குற்றவாளியின் கரம் கொலை செய்தகரமாக விருக்கலாகும் என்று கூறியது, முதலிய அத்தாட்சிகளால் உண்ணாமுலை குற்றம் செய்ததாகச் சந்தேகமின்றி ருசுவாகிறது" என்று கூறி முடித்தார். அச்சமயம் உண்ணாமுலையின் மனதில் பெருந்திகில் உண்டாயிற்று. சபையி

ளுள்ளோரில் பெரும்பாலார் அவள் குற்றம் செய்திருப்பாளென்றே கருதினார்கள்.

---

## 37-வது அத்தியாயம்.

### கொலைக்குற்ற விசாரணைத் தொடர்ச்சி.

துரைத்தன லாயர் மேற்கண்டவாறு கூறிவிட்டு ஆசனத்திலமர்ந்ததே நமது பாரிஸ்டர் வரதப் பிள்ளை மெதுவாக எழுந்து நின்றார். இதற்கு முன்பே லாயர் தம்புசாமிப் பிள்ளையும் திரும்பிவந்து வரதப் பிள்ளையின் பின்னால் உட்கார்ந்தார். வரதப்பிள்ளை யெழுந்து நின்றதும் உண்ணாமுலையின் முகத்தை யுற்று நோக்கினார். அச்சமயம் அவர் பார்வையின் நோக்கத்தை யறிந்துகொள்ளும் சக்தி வாய்ந்த சூக்கும அறிவாளிகள் யாரேனும் அங்கிருந்தால் அப்பார்வையில் இரக்கமும், பரிதாபமும், வேண்டுகோளும், அன்பும் நிறைந்திருந்தனவென்று தெரிந்துகொள்ளலாம். உண்மையில் அவர் உண்ணாமுலையை நோக்கி "இது உனக்கு மிக்க ஆபத்தான வேளை. இச்சமயத்திலாவது நீ யென்னிடம் கூறிய இரகசியங்களில் எனக்கு அவசியமாகத் தோன்றுகிறவற்றை மட்டுமாவது உன் பிராணனைக் காப்பாற்றுவதற்காக வெளியிடுமாறு அனுமதி யளிக்கவேண்டும்" என்று அப்பார்வையால் கேட்டார்.

மனோதிடமுடைய அப்பெண் நிரபராதியாகிய தன் பிராணனைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்பதைக் கூட சிந்திக்காமல், வரதப்பிள்ளையை நன்றியோடு நோக்கி வேண்டாம் என்று தலை யசைத்துவிட்டாள். பாரிஸ்டர் மன வருத்தத்தோடு மெதுவாய்ப் பெருமூச்சுவிட்டார். சற்று நேரத்திற்குள் வரதப்பிள்ளை தன் மனதைத் திடப்

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்கள் இயற்றியது.

# கனகபூஷணம்.

(இது ஓர் கற்புடைய உத்தமியின் அதிசயமான கதை.)

இதில் கற்பிலக்கணம் விவரமாய் உலக அனுபவத்தோடு விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. இக்கதாநாயகி தனக்கு நேரிடும் மிக்க பயங்கரமான அனேக இக்கட்டுகளிலிருந்து தன் கற்புக்குப் பழுதுவராமல் தப்பித்துக்கொள்வது மிக்க சோகத்தையும் ஆச்சரியத்தையும் தரும். அதோடு இதில் எவ்விதமான நடவடிக்கைகளும், அவைகளாலுண்டாகும் நன்மை தீமைகளும் தெளிவாய்க் கூறப்பட்டிருப்பதால், இது வாசிப்பவர்களுக்குச் சகலவித நற்குணங்களையும் போதிக்கக்கூடியதென்பது உண்மை. ஆண்பாலர், பெண்பாலரிருவர்க்கும் வேண்டிய சகல புத்திமதிகளும் இதில் அடங்கியிருக்கின்றன. இது முழுதும் உலக வழக்கத்தையும் அனுபவமான ஆசாரத்தையும் ஒட்டி எழுதப்பட்டிருக்கிறது.

முதல்பாகம் ரூ. 1—12—0 2-ம் பாகம் ரூ. 1—12—0

---

# இரத்தினபுரி இரகசியம்.

## ஓர் அற்புதமான தமிழ் நாவல்.

இதில் மிக்க ஆச்சரியமும் நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதிமுதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. பலவித நடவடிக்கைகளையுடைய பாத்திரங்களுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருட்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

நமது சிறுவர், சிறுமிகளும், ஸ்திரீகளும் அவசியமாய் உணரவேண்டிய இலௌகீக ஆசார விஷயங்களைப்பற்றி ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் இனிமையும் அருமையும் வாசிப்போர்களால் முன்னமே புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால் இதைப்பற்றி நாம் அதிகமாய்க் கூறவேண்டுவதில்லை. இதில் எல்லா ரசங்களும் பூரணமா யிருக்கின்றனவென்று மட்டும் கூறுகிறோம்.

முதல் பாகம் ரூ. 1—12—0 2-ம்பாகம் ரூ. 2—4—0

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை மதராஸ்.

# " ஆனந்தபோதினி "

## ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை

இச்சஞ்சிகை 1915ளு ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர்திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண் கல்வியையும் நோக்கமாய்க் கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதிசஞ்சிகையிலும், மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் எழுதப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரையுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத்தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில், 40 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0. மாதிரி காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

| | ரூ. | அ. | | | |
|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி இரகசியம் 2-பாகமும் ... | 4 | 0 | தினகரசுந்தரி ரூபா | 1 | 0 |
| பவளத்தீவு 2-பாகமும் ... | 3 | 0 | தபால்கொள்ளைக்காரர் | 0 | 14 |
| கற்கோட்டை ... | 2 | 0 | பத்மாஸனி ... | 0 | 14 |
| மின்சார மாயவன் ... | 1 | 8 | வீரநாதன் ... | 0 | 12 |
| தேவசுந்தரி ... | 1 | 4 | குணசுந்தரன் ... | 0 | 12 |
| கனகபூஷணம் 2-பாகமும் ... | 3 | 8 | மஞ்சள் அறையின் மர்மம் | 1 | 8 |
| சுவர்ணாம்பாள் ... | 0 | 12 | கமலசேகரன் ... | 1 | 12 |
| ஆனந்தவிஜய ... | 2 | 0 | பூங்கோதை ... | 0 | 10 |
| மதனபூஷணம் ... | 1 | 0 | இந்திராபாய் ... | 2 | 8 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸருடைய சரித்திர உபதேசங்கள் | 1 | 12 | அமராவதி 2 பாகமும் | 4 | 0 |
| | | | சகோதரவாஞ்சை | 0 | 6 |
| | | | லோகநாயகி அச்சில் | | |

விலாசம் : மானேஜர், " ஆனந்தபோதினி " ஆபீஸ்.
நெ 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதராஸ்.


Printed at the " Ananda Bodhini " Press, Madras.